# Siva Shrines in India & Beyond

## PART V (Final)

IN TAMIL

BY

**P. SAMBANDAM,** B.A., B.L.,

AUTHOR OF

The Two Sisters, Galava, The Eye of Love, The Curse of Urvasi, The Merchant of Vanipura, Fate and Love, Simhalanatha, Pushpavalli, Amaladitya, Magapathi, The Ideal Wife, Siruthondar, The Golden Fetters, True Love, The Bandit Chief, Bricks-Between, At any Cost, The Fair Ghost, Brahmin *vs* Non-Brahmin, Vijayarangam, As you Like it, Sati Sulochana, Lord Buddha, The Tragedy of Silence, The Good Fairy, Geetha Manjari, The True Brother, Malavikagnimitra, Chandrahari, The Demon Land, Sabapathy Part I, The Pongal Feast or Sabapathi Part II, A Rehearsal or Sabapathi Part III, Sabapathi Part IV, Mixture, Blessed in a Wife, The Dancing Girl, Subadra-Arjuna, Karna the Giver. Sahadeva's Stratagem, The Surgeon General's Prescription, Vichu's Wife, Sakuntala, Vikramorvasi, The Point of View, The Two Selves, The Tragic Denouement, The Sub-Assistant Magistrate of Sultanpet, Harischandra, Blind Ambition, Markandeya, Sarangadhara, Manohara, The Two Friends, The Knavery of Kalappa, As We Sow-So We Reap, Over Forty Years Before the Footlights Parts I, II, III, IV, V & VI, The Search, Prince Koneri, The Crowd in the Shandy, Ratnavali, The Gypsy Girl, Vaikunta Vaithiyar, Dikshithar Stories, Funny Stories, The Good Sister, Short Stories, Hints to Actors, The Tamil Drama. Humorous Essays, A hand-book for Tamil Talkies. Stray Flowers, The Wedding of Valli, Talkie Experiences, The Dead revived, Asthanapura Dramatic Company, Music-Mad, Sabapathi-Zamindar, The Nine Playlets, A Little Spark of Fire, Art *vs* Love, Deepavali Varisai, Hitler *vs* Indian, Siva Shrines Parts I, II, III, IV, etc. in Tamil.

FIRST EDITION

MADRAS

PRINTED AT THE ARUTPERUNJOTHI PRESS,

7/99, AMMAN COIL STREET, G. T., MADRAS—1.

1 9 4 8

*All rights reserved.*] *[Price Re. 2*

# சிவாலயங்கள்

# இந்தியாவிலும் அப்பாலும்

## ஐந்தாம் பாகம்

நாடகப்பேராசிரியர்

**ப. சம்பந்த முதலியார்,** பி.ஏ., பி.எல்.,

அவர்களால் இயற்றப்பட்டது.

**இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற நூல்கள் :—**

லீலாவதி சுலோசனை, சாரங்கதரன், மகபதி, காதலர் கண்கள், நற்குல தெய்வம், மனோஹரன், ஊர்வசியின் சாபம், இடைச்சுவர் இருபுறமும், என்ன நேர்ந்திடினும், விஜயரங்கம், கள்வர் தலைவன், தாசிப் பெண், மெய்க்காதல், பொன் விலங்குகள், சிம்ஹளநாதன், விரும்பிய விதமே, சிறுத்தொண்டர், காலவரிஷி, ரஜபுத்ரவீரன், உண்மையான சகோதரன், சதி-சுலோசனை, புஷ்பவல்லி, கீதமஞ்சரி, உத்தம பத்தினி, அமலாதித்யன், சபாபதி முதற்பாகம், பொங்கல் பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றாம் பாகம், சபாபதி நான்காம் பாகம், பேயல்ல பெண்மணியே, புத்த அவதாரம், விச்சுவின் மனைவி, வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்திரார்ஜுனை, கொடையாளி கர்ணன், சஹதேவன் சூழ்ச்சி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து, மாளவிகாக்னிமித்ரம், விபரீதமான முடிவு, சுல்தான்பேட்டை சப்-அஸிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட், சகுந்தலை, காளப்பன்கள்ளத்தனம், விக்ரமோர்வசி, முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும், நாடகமேடை நினைவுகள் — ஆறு பாகங்கள், நாடகத் தமிழ், யயாதி, பிராம்மணனும் சூத்திரனும், வாணீபுர வணிகன், இரண்டு நண்பர்கள், சத்ருஜித், ஹரிச்சந்திரன், மார்க்கண்டேயர், ரத்னாவளி, கண்டு பிடித்தல், கோனேரி அரசகுமாரன், சந்தையிற் கூட்டம், வைகுண்ட வைத்தியர், தீட்சிதர் கதைகள், ஹாஸ்யக் கதைகள், குறமகள், நல்லதங்காள், சிறுகதைகள், நடிப்புக்கலையில் தேர்ச்சி பெறுவதெப்படி? ஹாஸ்ய வியாசங்கள், தமிழ் பேசும் படக் காக்ஷி, விடுதிப் புஷ்பங்கள், பேசும்பட அனுபவங்கள், வள்ளி மணம், கதம்பம், மாண்டவர் மீண்டது, ஆஸ்தானபுரம் நாடகச் சபை, சங்கீதப் பயித்தியம், ஒன்பது குட்டி நாடகங்கள், சபாபதி ஜமீன்தார், சிவாலயங்கள்-இந்தியாவிலும் அப்பாலும் முதல் நான்கு பாகங்கள், சிவாலய சிற்பங்கள், மனையாட்சி, தீபாவளி வரிசை, இந்தியனும் ஹிட்லரும், காலக் குறிப்புகள், சுப்ரமண்ய ஆலயங்கள், தீயின் சிறு திவலை, கலையோ காதலோ, உணவுப் பொருள்களின் குணங்கள் முதலியன.

முதற் பதிப்பு

அருட்பெருஞ்ஜோதி அச்சகம், சென்னை—1.

காபிரைட்.]

1948

[விலை ரூபா 2.60

Inscribed

to

The Beloved Memory

of

My Parents

**P. VIJAYARANGA MUDALIAR**

AND

**P. MANICKAVELU AMMAL**

AND

My Friend

**C. RANGAVADIVELU**

**முஞ்சிரா**—திருவாங்கூர் ராஜ்யம், சிவாலயம்.

**முட்டம்**—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, சிவாலயம்.

**முடபித்ரி**—கார்கல் தாலூகா, தென்கன்னட ஜில்லா, சென்னை ராஜதானி; மஹாலிங்கேஸ்வரர் கோயில்; இங்கு சோமநாதர் கோயில் என்று மற்றொரு சிவாலயமுளது.

**முடிகொண்டா**—நெல்லூர் ஜில்லா, சென்னை ராஜதானி; சோமேஸ்வர ஸ்வாமி கோயில், பிரம்மோற்சவம் வைகாசி மாதம்.

**முடிகொண்டான்**—சென்னை ராஜதானி; தஞ்சாவூர் ஜில்லா; நந்நிலத்திற்கு 2 மைல் - சிவாலயம்.

**முண்டீச்சுரம்**—(திரு) முண்டீச்சரம் எனவும் வழங்கப்படுகிறது. திருவெண்ணெய் நல்லூருக்கு 3 மைல் கிழக்கு; சென்னை ராஜதானி; இந்திரன், பிரம்மா பூசித்த க்ஷேத்திரம். சுவாமி-முண்டீஸ்வரர், தேவி - கானார்குழலியம்மை, முண்டக தீர்த்தம், கண்ணுயிர தீர்த்தம், இங்கு நடனபாதேஸ்வரர், அஸ்தகாளாம்பிகை எனும் மூர்த்திகளும் உண்டு. அப்பர் பாடல் பெற்றது.

**முத்துப்பேட்டை**, — திருமுருகன்பூண்டி தாலூகா சென்னை ராஜதானி, சிவாலயம். தில்லைவிளாகத்திற்கு 10 மயில்; ரெயில் ஸ்டேஷன்.

**முத்தூர்**—தாராபுரம் தாலூகா, கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, பழய சிவாலயம்—பாழாயிருக்கிறது. ஸ்வாமிபெயர் குலோத்துங்கேஸ்வரர்-குலோத்துங்கசோழனால் கட்டப்பட்டது.

**முதுகுளத்தூர்**—ராம்நாட் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்; வரகுணபாண்டியனால் கட்டப்பட்டதென்பர்.

**முதுகெரே**—மைசூர் ராஜ்யம், சிவாலயம்—ஸ்வாமி எரிகேஸ்வரர். கோயில் 1155௵ கட்டப்பட்டது, முதலாம் நரசிம்மஹொய்சல அரசன் காலத்தில்.

**முதகெரி**—உடுப்பி தாலூகா, தென்கன்னட ஜில்லா, சென்னை ராஜதானி, பார்கூர் அருகிலுள்ளது. இங்கு 2 சிவாலயங்கள் உள. (1) சோமேஸ்வரர் கோயில், (2) சோமநாதர் கோயில்.

**முதுமலை**—நீலகிரி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். இதற்கருகில் ஹாளிகல் என்னும் ஊரில் ஒரு சிறு சிவாலயமுளது.

**மூரமல்லா.**—கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்; சுமார் 500 வருடங்களுக்குமுன்பாக ஒரு விதவா ஸ்திரீயால் கட்டப்பட்டது என்பர்.

**முருகன்பூண்டி.**—(திரு) சென்னை ராஜதானி; திருப்பூர் ஸ்டேஷனுக்கு 5 மயில் வடமேற்கு; சுப்பிரமணியர் பூசித்த க்ஷேத்திரம்; சுந்தரர் சேரமான் பெருமாணாயனார் கொடுத்த பொருளைத் திருவாரூருக்குக் கொண்டு போகையில், சிவபிரான் பூதகணங்களை வேடர்களாக்கி, அவற்றைப் பறிக்கச்செய்து, பிறகு சுந்தரர் பதிகத்திற்கிணங்கி மீட்டும் கொடுத்தருளிய ஸ்தலம். ஸ்வாமி முருகநாதேஸ்வரர்; தேவி முயங்குபூண்முலையம்மை, ஆவுடைநாயகியம்மை; பிரம்மதீர்த்தம், ஆவுடை தீர்த்தம். கோயில் தரைமட்டத்திற்குக் கொஞ்சம் கீழ் உள்ளது. 175 x 150 அடி விஸ்தீர்ணம்; மேற்கு பார்த்தது, லிங்கம் தெற்கு பார்த்தது; சுப்பிரமணியர் வடக்கே செல்லும்போது பிரதிஷ்டை செய்தபடியால் லிங்கம் தெற்கு முகமாயிருக்கிறதென்பது ஐதிகம். கோயில் ஒரே பிராகாரமுடையது; பல கல்வெட்டுகளுடையது. இங்கு பரமேஸ்வரர் பிரம்ம தாண்டவம் ஆடினதாகவும் நடராஜருடைய பொன்னாலாய விக்ரஹம், அருகிலுள்ள திட்டுக்காடென்னுமிடத்தில் புதைக்கப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. 12 வருடங்களுக்கொருமுறை இங்குள்ள ஒரு கற்பாறையிலிருந்து ஜலம் வருவதாகச் சொல்லப்படுகிறது. சுந்தரர் பாடல் பெற்றது.

**முருகிபூடி.**—நாசராவ்பெட் தாலூகா, குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம்.

**மூரப்பநாடு** — திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி, இங்கு 2 சிவாலயங்கள் உள. கைலாசநாதர் கோயில், சொக்கலிங்கஸ்வாமி கோயில்.

**முல்லைவாயில்**—(திரு) தெற்கு, தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சீர்காழிக்கு 5 மயில் கிழக்கு; பார்வதிதேவி பரமசிவத்திடமிருந்து மந்திரோபதேசம் பெற்ற க்ஷேத்திரம், ஸ்வாமி முல்லைவனநாதர்; தேவி கோதையம்மை, கடற்கரையோர தீர்த்தம், தேவேந்திரன், சுதர்மன் பூசித்த ஸ்தலம், திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

**முல்லைவாயில்**—(திரு) வடக்கு, சென்னை ராஜதானி, மதராஸ் ரெயில்ஸ்டேஷன்; அம்பத்தூருக்கு $1\frac{1}{2}$ மயில் வடக்கு, தொண்டைமான், சுப்பிரமணியர், மஹாவிஷ்ணு,

பிரம்மா, இந்திரன், இந்திராணி, ஐராவதம், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், தீர்க்கபாஹு, தூர்வாசர், வசிஷ்டர், பிருகு, சித்ரகர்மன், சம்புதாசன், குசலவர் பூசித்த க்ஷேத்திரம். தொண்டைமான் ஆனைமீது செல்லும்போது யானையின் கால் முல்லைக்கொடிகளில் சிக்கிக் கொள்ள, அவற்றை அகற்ற வாள்கொண்டு வீச, அவ்வாளானது அங்கிருந்த சிவலிங்கத்தின்மீது பட்டதாக ஸ்தல புராணம். அவ்வடு இன்னும் சிவலிங்கத்தில் காணலாம்—ஸ்வாமி மாசிலாமணீஸ்வரர், தேவி கொடியிடை நாயகி, தீர்த்தங்கள்—பாலாறு, சுப்பிரமணியர் தீர்த்தம். கோயில் ஆதொண்டைச் சக்ரவர்த்தியால் கட்டப்பட்டதென்பர். இங்குள்ள நந்தி புழுலைப் பார்த்திருக்கிறது, ஸ்வாமிக்கு முதுகைக் காட்டி. கர்ப்பக்கிரஹம் கஜப்பிரஷ்ட ஆகிருதி. தற்காலக் கோயில் சுமார் 1064—1113 வருடங்களுக்குள் கட்டப்பட்டிருக்கலாம் என்று எண்ணப்படுகிறது. கல்வெட்டுகள் பல உண்டு. தேவிகோயில் விஜயநகர அரசர் காலத்தில் கட்டப்பட்டது; இதில் கல்வெட்டுகள் இல்லை. கோயிலில் எருக்க மரத்தாலாகிய இரண்டு தூண்கள் இருக்கின்றன; இவை தொண்டமான் சக்ரவர்த்தியால் கொடுக்கப்பட்டன வென்று சொல்லப்படுகிறது. பிரம்மோற்சவம் சித்திரை மாதம்; பிரம்மா பூசித்து உற்சவம் ஆதியில் செய்ததாக ஐதிகம். அம்மன் சந்நிதி ஸ்வாமிக்கு வலமா யிருக்கிறது. 9-ஆம் நாள் முல்லையடி சேவை உற்சவம் பிரபலம். சுந்தரர் பாடல் பெற்றது.

**முள்ளிபள்ளம்**—மதுரை ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

**முறப்பாடு**—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, ஆழ்வார்திருநகரிக்கு 6 மைல் சிவாலயம்; கைலாசநாதர், சிவகாமி; தாமிரபரணி; அங்கிரசர் பூசித்த ஸ்தலம்.

**முழையூர்**—முனையூர் என்றும் பெயர், கும்பகோணம் தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம், வைப்பு ஸ்தலம்.

**முறையூர்**—திருப்பத்தூர் தாலூகா, செட்டிநாடு, சென்னை ராஜதானி, சிவாலயம்-சுந்தரேஸ்வரர், மீனாட்சி.

**முனகாலா கிராமம்** — கிருஷ்ணா ஜில்லா, சென்னை ராஜதானி; மல்லிகார்ஜுனர் கோயில்— இங்கு 1300 வருஷத்திய கல்வெட்டொன்றுளது.

**மூனியூர்** — கும்பகோணம் தாலுகா, தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம், ஸ்வாமி அகஸ்தீஸ்வரர்.

**மூஜபர்பூர்** பிரிவு — வங்க ராஜதானி, தேங்காளி கிராமம், சிவாலயம்; ஸ்வாமி புவனேஸ்வரர், சிவலிங்கம் கருப்புக்கல்லாலாயது.

**மூக்கீச்சுரம்** — தற்காலம் உறையூர் என வழங்கப்படுகிறது, சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஸ்டேஷனுக்கு $1\frac{1}{2}$ மைல் மேற்கு, சிவாலயம். நாகம், கருடன், பிரமர், கத்ருரிஷி, கஸ்யபர் மனைவி பூசித்த ஸ்தலம். புகழ்ச்சோழனார் வாழ்ந்த ஸ்தலம்; கோட்செங்கட்சோழன் முத்தியடைந்த ஸ்தலம்-ஸ்வாமி பஞ்சவர்ணேஸ்வரர் தேவி காந்திமதியம்மை. பாதாள பொந்திலிருந்து ஐந்து லிங்கங்களைக் கொண்டு வந்து நாகராஜன் அவைகளை ஒன்றாகச் சேர்த்து லிங்கப் பிரதிஷ்டை செய்ததாக ஐதிகம். பஞ்சவர்ண தீர்த்தம்—லிங்கம் தினம் ஐந்துமுறை வர்ணம் மாறுவதாக ஐதீகம். திருஞானசம்பந்தர் பாடப் பெற்றது.

**மூலம்பேட்டை**—நெல்லூர் ஜில்லா, மேற்படி தாலூகா, சென்னை ராஜதானி, ஸ்ரீ மூலஸ்தானீஸ்வரர் கோயில்.

**மூர்ஷிடாபாத்** பிரிவு—வங்காள ராஜதானி, பாராநகர் கிராமம், சிவாலயம்; ஸ்வாமி புவனேஸ்வரர்—தேவி நாகராஜேஸ்வரி.

**மூவலூர்**—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, மாயவரத்திற்கு மேற்கிலுள்ளது—ஸ்வாமி மார்க்கசகாயர் அல்லது வழிகாட்டும் வள்ளல், தேவி மங்களாம்பிகை, வைப்புஸ்தலம்.

**மூழையூர்**—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணத்திற்கு 4 மைல் சிவாலயம், ஸ்வாமி பரசுநாதேஸ்வரர், தேவி ஞானம்பிகை; நந்தி பூசித்த ஸ்தலம். வைப்புஸ்தலம்.

**மூகாம்பி**—தென் இந்தியா, மலையாள தேசம், சிவாலயம்; திருமூர்த்திஸ்தலம்.

**மொரட்டூர்**—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சிவாலயம், ஸ்வாமி உன்னதபுரீஸ்வரர், தேவி சிவப்பிரியை.

**மேட்டுப்பட்டி** — மதுரை ஜில்லா, நிலக்கோட்டைக்கு 5 மைல், சென்னை ராஜதானி, இதற்கு ஒரு மைல் தூரத்திலுள்ள சித்தர் மலைமீது ஒரு சிவாலயமுண்டு.

**மேட்டுபுத்தூர்**—சென்னை ராஜதானி, விஜயமங்கலம் ரெயில் ஸ்டேஷனுக்கு 4 மைல் சிவாலயம்; பழமையானது. இங்குள்ள பெரிய ஜைன ஆலயத்திற் கருகிலுள்ளது; ஸ்வாமி அம்மன் கோயில்களில் பல கல்வெட்டுகள் உள.

**மேடியூர்**—சென்னை ராஜதானி சிவாலயம்; இங்குள்ள உமாசஹித சந்திரசேகரமூர்த்தி மிகவும் அழகியது.

**மேல்சேரி**—தென் ஆற்காடு ஜில்லா, திண்டிவனம் தாலூகா, சென்னை ராஜதானி காவிரிப்பாக்கத்துக் கருகிலுள்ளது. சிவாலயம் 8-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டது. கோயில் மிகவும் சிலமாயிருக்கிறது; தற்காலம் பூசையில்லை. ஸ்வாமி மத்திரேஸ்வரர். குகைக்கோயில்; கோயிலும், லிங்கமும் ஒரு சிறு குன்றில் வெட்டப்பட்டிருக்கிறது. இங்குள்ள கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் ஸ்ரீ சிகரபல்லவேஸ்வரர் என்றிருக்கிறது. பல்லவ அரசர்களால் வெட்டப்பட்ட கோயில்.

**மேல்பாடி** — சித்தூர் ஜில்லா, மேற்படி தாலூகா சென்னை ராஜதானி, சோமநாதர் கோயில்; இங்கு **சோமேஸ்வரர் கோயில்** என்று மற்றொரு சிவாலயமுண்டு.

**மேலூர்**—புதுக்கோட்டை சமஸ்தானம் திருமெய்யம் தாலூகா, புதுக்கோட்டைக்கு 14 மைல், சிவாலயம், இக்கோயில் மாணிக்கவாசகர் காலத்தில் இருந்ததென்பதற்கு ஆதார முண்டு.

**மைசூர்**—மைசூர் ராஜ்யம். இங்குள்ள சிவாலயங்கள், **கோட்டை சோமேஸ்வரர்** கோயில் பூர்வம் சிறிய கோயிலாயிருந்தது, 1893ஸ் பார்வதி கோவில் முதலியவற்றால் பெரிதாக்கப்பட்டது, ஸ்ரீமான் ஆறுமுகம் பிள்ளை அவர்கள் முயற்சியால். **திரினேஸ்வரர் கோயில்** (திரிநேத்ர+ஈஸ்வரர் ?) திருணபிந்து ரிஷி இங்கு ஈஸ்வரரைப் பூசித்த இடமெனச் சொல்லப்படுகிறது. இக்கோயிலுக்கு பிரம்மோற்சவம் உண்டு. அந்தகாசுர சம்மார உற்சவம் மைசூர் அரண்மனையின் எதிரில் நடக்கிறது **காசிவிஸ்வநாதர் கோயில்** — பழய அக்ரஹாரத்திலுள்ளது—ஸ்வாமி விஸ்வநாதர், தேவி விசாலாட்சி காசி கங்கை தீர்த்தம். காந்தராஜ்அர்ஸ் என்பவரால் புதிதாக்கப்பட்டது. சாம்ராஜ்பேட்டில் சிவாலயம்; ஸ்வாமி பிரசன்ன விஸ்வேஸ்வரர், தேவி பிரசன்ன லலிதாம்பாள் சென்ற 50 வருடங்களுக்குள் கட்டப்பட்டது; சுண்ணாம்பு கட்டிடம்.

**மைசூர்** ராஜ்யத்தில் கெம்பசாகரர் கோயில், நாக மங்கலக் கோயில் என்று இரண்டு குகைச் சிவாலயங்கள் உள.

**மைத்ரேஸ்வரர் கோயில்** — ஒரிஸ்ஸா மாகாணத்தி லுள்ளது சிவாலயம்.

**மெய்யம்**—திருமெய்யம் எனவும் வழங்கப்படுகிறது. புதுக்கோட்டைசமஸ்தானம், புதுக்கோட்டைக்கு 13 மைல். சிவாலயம் விஷ்ணு ஆலயத்தை யடுத்துள்ளது. பிரம் மோற்சவம் சித்திரை மாதம்; கோயில் 7-ம் நூற்றாண்டில் உண்டானது, குகைக்கோயில், மஹேந்திர வர்மா செதுக் கியது. பல்லவ கட்டடம், கர்ப்பக்கிரஹமும், லிங்கமும் நந்தியும் மலையில் குடையப்பட்டிருக்கின்றன. மலைக்கு சத்யகிரி என்று பெயர்; ஸ்வாமி சத்யகிரீஸ்வரர். இங்கு இரண்டு சத்திரங்கள் உள.

**மேலைச்சேரி**—சென்னை ராஜதானி, தென் ஆற்காடு ஜில்லா, சிவாலயம்; செஞ்சிக்கு அருகிலுள்ளது. பல்லவ கட்டடம்.

**மையச்சூர்**—நன்னிலம் தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம், ஸ்வாமி மிஹிரருணேஸ் வரர்.

**மொகிலி**—சித்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம், சித்தூரிலிருந்து 18 மைல். பல நூற்றாண்டு களுக்குமுன் மொகிலப்பா என்னும் இடையனால் லிங்கம் கண்டு பிடிக்கப்பட்டதென்பது ஐதிகம். ஸ்தல புராணத் தின்படி கி.பி. 120 ஆண்டில் கோயில் கட்டப்பட்டதென் பர் (?) கோயில் 1843 புதுப்பிக்கப்பட்டது. லிங்கத்திற்கு தலையில் வடு உளது. திரிசூல சங்கர தீர்த்தம். நந்தி வாயி னின்றும் எப்பொழுதும் ஜலம் வந்துகொண்டிருக்கிறது.

**மொளகல்முரு**—சிட்டல்துர்க் ஜில்லா, மைசூர் ராஜ் யம், (கன்னடத்தில் முழங்கால்முறி என்று அர்த்தமாகும்) ஐதிங்க ராமேஸ்வரர் குன்றில் ஒரு சிவாலயமுண்டு; ராவ ணன் சீதையை அபகரித்துக்கொண்டு போனபோது இங்குள்ள லிங்கம் சீதாதேவியால் பிரதிஷ்டை செய்யப் பட்ட தென்பது ஐதிகம். 961ௐ ஓர் கடம்ப அரசனால் வெட்டப்பட்ட கல்வெட்டொன்றில் இது குறிப்பிடப்பட் டிருக்கிறது

**மோசூர்**—சென்னை ராஜதானி அரக்கோணத்திற்கு 3 மைல்; இங்கு 2 சிவாலயங்கள் உண்டு (1) காளத்தீஸ்வரர் கோயில் (2) அகஸ்தீஸ்வரர் கோயில்.

மோதஹல்லி—மைசூர் ராஜ்யம்—சிவாலயம்; ஸ்வாமி மல்லிகார்ஜுனர்.

மோர்வி—வட இந்தியா-வங்காளம் (?) சிவாலயம்; சிவராத்திரி விசேஷம்.

மோஹனூர்—நாமக்கல் தாலூகா, திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, மகனூர்என்பது மோஹனூர் என்று வழங்கிய தென்பர். லிங்கம் மேற்கு பார்த்தது. ஸ்வாமி பெயர் அசலதீபேஸ்வரர், சந்நிதியிலிருக்கும் தீபம் அசைவதில்லை என்பது ஐதிகம்.

மோஹன் ஜதரோ—வட இந்தியா, சிந்து நதிக்கரையிலிருந்த மிகுந்த புராதனமான அழிந்துபோன பட்டணம் (கி.மு. 3000) இங்கு சிவலிங்கங்கள் கண்டு பிடிக்கப் பட்டிருக்கின்றன; ஆகவே இங்கு சிவாலயங்கள் இருந்திருக்கவேண்டும் ஆதிகாலத்தில்.

மௌசெவ்வல்—அம்பா சமுத்திரம் தாலூகா, திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்; ஸ்வாமி ஆதித்யவர்ணேஸ்வரர்.

யானைக்குகை—எலிபாண்டாகுகை, என்றும் பெயர் உண்டு. இது ஒரு தீவிலிருக்கிறது. பம்பாய் அபாலோ பந்தரிலிருந்து 6 மைல் கப்பல் மார்க்கமாய்ப் போக வேண்டும்—ஒரு மணிநேரம் சுமார் பிடிக்கும். படகுகளிலிருந்து இறங்குமிடம் ஒரு கருங்கல் யானை இருந்தபடியால் (இது தற்காலம் பம்பாய் மியூசியத்திலிருக்கிறது) போர்த்துகேயர்கள் இத்தீவிற்கு எலிபாண்டாகேவ் (யானைக்குகை) என்று பெயர் வைத்தனர். இதன் பூர்வீக பெயர் காராபுரி (கோட்டை நகரம்) என்பதாம் தீவின் சுற்றளவு 5 மைல்; சிவாலயம். சுமார் 300 வருடங்களுக்கு முன் போர்த்துகேயர்கள் பீரங்கிளைக்கொண்டு இதைச் சுட்டுப் பாழாக்கியிருக்கின்றனர். மேற்குப் பக்கத்திலுள்ள பெரிய குகையில் சிவாலயமிருக்கிறது; ஒரே கற்பாறையில் செதுக்கப்பட்டது; 130 அடி சதுரம்; முன் பக்கம் 3 பெரிய தூண்கள் இருக்கின்றன. உள்ளே கோயில் 91 அடி சதுரம்; இதற்கு 6 வரிசை தூண்கள் இருக்கின்றன உள்ளே இருக்கும் முக்கிய மூர்த்தி சாதாரணமாக திரிமூர்த்தி என்றழைக்கப்படுகிறது; இது தவறாகும். காலஞ்சென்ற கோபிநாத்ராயர் கூறியபடி இது சிவபிரானது மஹேஸ்வரமூர்த்தி ஸ்வரூபமாம். இதற்கு வலதுபுறம் அறையில் லிங்கம் இருக்கிறது. கிழக்குபுறம் அர்த்தநாரீஸ்வரர் உருவம், 17 அடி உயரம், மற்றொரு அறையில்

பார்வதி தேவியின் கல்யாணம் செதுக்கப்பட்டிருக்கிறது. கலியாண சுந்தரமூர்த்தி மிகவும் அழகியவர். மேற்கு பக்கம் கபாலமூர்த்தியும், நடராஜமூர்த்தியும் பார்க்கத் தக்கவை. ஐரோப்பிய பூர்வீக சாஸ்திர வித்வான்கள் இந்த சில்பங்களை மிகவும் புகழ்ந்திருக்கின்றனர். புரொபசர் தீக்ஷித் இவை ஆறும் நூற்றாண்டில் சளுக்கிய அரசர்களால் வெட்டப்பட்டதாக மதிக்கிறார். சிவராத்ரியில் மாத்திரம் பூஜை நடக்கிறது, மற்ற காலங்களில இல்லை. சில்பங்களெல்லாம் ஏறக்குறைய எல்லோராகுகை சில்பங்களை ஒத்திருக்கின்றன.

**யாழ்ப்பாணத்து நல்லூர்**—இலங்கைத் தீவு, சிவாலயம்—ஸ்வாமி கைலாசநாதர், ஜெயவீரசிங்கன் எனும் இலங்கை மன்னனால் கட்டப்பட்டது.

**ரட்டேஹல்லி**—தார்வார்ஜில்லா, பம்பாய் ராஜதானி கடம்பேஸ்வரர் கோயில்—3 சந்நிதிகளடங்கிய சளுக்கிய கட்டடம், மேற்கு விமானத்தில் ஹொய்சலபிருது இருக்கிறது.

**ரட்டம்**—வடஇந்தியா ரெயில்ஸ்டேஷன்; சிவாலயம்.

**ரத்னகிரி**—திருச்சிராப்பள்ளி ஜில்லா, குளித்தலை தாலூகா, சென்னை ராஜதானி சிவாலயம்—ஸ்வாமி ரத்னகிரீஸ்வரர் அல்லது சொக்கர். அகஸ்தியர் பூஜித்த ஸ்தலம். இங்கு ஸ்வாமி திருமஞ்சனத்திற்கு ஒரு பண்டாரம் காவிரியிலிருந்து தீர்த்தம கொண்டுவருவது வழக்கம். கல்வெட்டுகளில் ஸ்வாமியின் பெயர் மாணிக்கமலையுடைய நாயினார் என்றிருக்கிறது.

**ரத்னபுரி**—பங்காள் நாக்பூர் ரெயில் ஸ்டேஷன் பிலாஸ்புரத்திலிருந்து 15 மைல்; சிவாலயம்; ஸ்வாமி ரத்னேஸ்வரர், தேவி பார்வதி, சரோவர தீர்த்தம். இங்குள்ள கலியாண சுந்தரமூர்த்தி பார்க்கத்தக்கவர் இங்கு தர்மசாலைகளுண்டு.

**ரவிபாடு**—கிருஷ்ணா ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

**ராதாபுரம்** — திருநெல்வேலி ஜில்லா, நாங்குநரி தாலூகா, சென்னை ராஜதானி சிவாலயம், ஸ்வாமி வரகுண பாண்டீஸ்வரர், தேவி நித்யகல்யாணியம்மை; கல்வெட்டுகளில் இவ்வூரின் பெயர் ராஜராஜபுரம் என்றிருக்கிறது.

**ராம்நகர்பர்கானா**—ஐக்கிய மாகாணம்—அஹிசத்ரம் எனும் ஊரில் சிவாலயம்; ஜீரணமாயிருக்கிறது. இதுதான்

வட இந்தியாவிலுள்ள மிகவும் புராதனமான சிவாலயம் என்று எண்ணப்படுகிறது. கன்னிங்காம்துரை இது கி.மு. முதல் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக எண்ணுகிறார்.

**ராம்நாத்பூர்**—மைசூர் ராஜ்யம், பழய சிவாலயம்—ஸ்வாமி ராமேஷ்வர், காவிரி தீர்த்தம், இங்கு காவிரியில் கல்லாலாகிய ஒரு பசு இருக்கிறது. அதன்கீழ் யாத்ரீகர்கள் தலைமுதல் கால்வரை தண்ணீரில் மூழ்கிச் செல்கின்றனர்.

**ராம்பூர்**—பாரல்லி ஜில்லா, ஐக்கிய மாகாணம்—இரண்டு மாடிகளுடைய சிவாலயம், இது கி.பி. முதல் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக எண்ணப்படுகிறது; மரத்தாலும் செங்கல்லினாலும் ஆயது. தற்காலம் மிகவும் கிலமாயிருக்கிறது.

**ராமகிரி**-சென்னை ராஜதானி, நாகலாபுரம் தாலூகா, நாகலாபுரத்திற்கு 2 மைல் சிவாலயம், ஸ்வாமி வாலி ஈஸ்வரர்—பெரிய கோயில்.

**ராமவரம்**—கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம்; சிறு குன்றிலிருக்கிறது. ஸ்வாமி விஸ்வநாதர்.

**ராமநதீச்சுரம்**—(திரு) சென்னை ராஜதானி, திருப்பத்தூருக்கு 1 மைல் தெற்கு; ஸ்ரீ ராமர் சிவபெருமானை பூசித்த க்ஷேத்திரம், மிருகண்டு பூசித்த ஸ்தலம்; நந்நிலத்திலிறங்கி சுமார் 5 மைல் போகவேண்டும்—சிவாலயம்; ஸ்வாமி ராமநாதேஸ்வரர் அல்லது ராமலிங்கேஸ்வரர், தேவி கருவார் குழலியம்மை; மணிகங்கை, ராமநாத தீர்த்தம். திருஞானசம்பந்தர் பாடல்பெற்றது.

**ராமநாதபுரம்**—மேற்படி ஜில்லா, சென்னை ராஜதானி, ரெயில்ஸ்டேஷன் சிவாலயம்; மூகவை ஊருணிக்கருகிலுள்ளது; கோட்டைக்கு வெளியில் முத்துராமலிங்க ஸ்வாமி கோயில் இங்கு முசாபர் பங்களா உண்டு; இரண்டு சத்திரங்களுண்டு.

**ராமனர்**—இமயமலை ஸ்தலம்—சிவாலயம்.

**ராமேஸ்வரம்**—இந்தியாவின் தெற்கேயுள்ள பாம்பன் தீவிலுள்ளது. தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன். கோயில் ஸ்டேஷனிலிருந்து சுமார் 1 மைல். ஸ்ரீராமர், ராவண சம்ஹார பீடை நிவர்த்தியாகும்படி லிங்கப்பிரதிஷ்டை செய்து பூசித்த க்ஷேத்திரம், ஸ்வாமி ராமநாதேஸ்வரர், தேவி பர்வதவர்த்தனி அல்லது மலைவளர் மாதவியம்மன். தீர்த்தம்—தனுஷ்கோடி முதலிய பல தீர்த்தங்கள் உள.

அவற்றுள் 14 கோயிலுக்குள் இருக்கின்றன. சேது ஸ்நானம் மிகவும் புனிதமானது என்பது லோகப் பிரசித்தமான விஷயம். இக்கோயிலில் முக்கியமாக 16 லிங்கங்கள் இருக்கின்றன—ஹநுமார் லிங்கம், ஸ்ரீராமர் லிங்கம், சீதாதேவி லிங்கம், லக்ஷ்மணர் லிங்கம், சுக்கிரீவ லிங்கம், நள லிங்கம், அங்கத லிங்கம், நீலன் லிங்கம், ஜாம்பவான் லிங்கம், விபீஷணர் லிங்கம், இந்திர லிங்கம் முதலியன. ஸ்தல மஹாத்மியத்தில், நருமதை தீரத்திலிருந்து அனுமார் ஒரு லிங்கத்தைக் கொண்டுவருமுன், ஸ்ரீராமர் வேறொரு லிங்கத்தை மணலால் சீதாதேவி பூஜிப்பதற்காக பிரதிஷ்டை செய்ததாகவும், பிறகு அனுமார் கொண்டு வந்த லிங்கத்தை அதற்கு வடக்கில் பிரதிஷ்டை செய்ததாகவும் கூறப்பட்டிருக்கிறது. பிறகு அனுமார் மணல் லிங்கத்தை தன் வாலால் பிடுங்கி எறியப் பார்த்ததாகவும், முடியாமற் போனதாகவும் ஐதிகம். அனுமாருடைய கோபம் தீர, ஸ்ரீராமர் அவர் கொண்டு வந்த லிங்கத்திற்கு முதல் பூஜை நடக்கவேண்டுமென்று ஆக்ஞாபித்ததாக ஸ்தலபுராணம். அந்த லிங்கத்தில் அனுமார் வாலின் வடுக்கள் இருக்கின்றன. இங்குள்ள கோயில் இந்தியாவிலுள்ள மிகப் பெரிய கோயில்களில் ஒன்றும்; 557 அடி அகலம், சுமார் 1000 அடி நிகளம், 3 பிராகாரங்களுடையது. இப்பொழுதிருக்கும் புதிய கோயிலின் பெரும்பாகம் 1550—1560 வருடங்களில் கட்டப்பட்டதென்பர். ராமநாத பண்டாரம் என்பவரால் சிலபாகம் 1598ஸ்ரீ கட்டப்பட்டது. கோயிலின் கர்ப்பக்கிரஹமும் மேற்கு கோபுரத்திற்கு அருகிலுள்ள ராமநாதஸ்வாமி கோயிலும் மிகவும் பழமையானவை. இவை 11 அல்லது 12-ம் நூற்றுண்டில் கட்டப்பட்டிருக்கலாமென்று காலஞ்சென்ற பெர்கூசன் துரை எண்ணுகிறார். கந்தமாதன ஸ்வாமி கோயில்; 50 அடி உயரம் 34 அடி நிகளம், பெரிய மதிற்சுவர் 20 அடி உயரம்; நான்கு புறத்திலும் நான்கு கோபுரங்கள் உள; இவை அஸ்திவாரம் முதல் சிகரம் வரையில் கருங்கல்லால் கட்டப்பட்டவை. ஸ்வாமி கோயிலின் கிழக்கு கோபுரம் சடையப்ப தேவர் தளவாயால் கட்டப்பட்டது. இவர் 1640ஸ்ரீ சேதுபதியாயிருந்தவர். கர்ப்பக்கிரஹப் பிராகாரம 109 x 307 அடி; முதல் பிராகாரம் சிங்களத்து கண்டிராஜரால் கட்டப்பட்டதாம். இரண்டாம் பிராகாரம் 386 அடி x 314 அடி; திருமலை நாயகரால் ஆரம்பிக்கப்பட்டு, திருமலை சேதுபதியால் முடிக்கப்பட்டதென்பர். மூன்றும் பிராகாரம் முத்துரகுநாத தேவரால் ஆரம்பிக்கப்பட்டு முத்துராமலிங்க

தேவரால் முடிக்கப்பட்டது; 690x435 அடி; ஸ்வாமி சந்நிதியும் தேவி சந்நிதியும் மதுரையிலிருப்பதுபோல் அக்கம் பக்கமா யிருக்கின்றன. இரண்டும் கிழக்கு பார்த்தவை. சேது மாதவர் கோயிலும் (இங்கிருக்கும் விஷ்ணு ஆலயம்) கணேசர் சிலையும் ஒருவித மணற்கல்லால் ஆக்கப்பட்டவை, இவை உதிர்ந்துகொண்டு வருகின்றன. பழய கோபுரங்கள் இலேசான பவழப் பாறைகளால் கட்டப்பட்டவை. சர்வ தீர்த்தம் எனும் கிணற்றினின்றும் கிழே தெற்கு முகமாக ஒரு வழி போகிறது. நள தீர்த்தம், நீல தீர்த்தம்—இவைகள் அருகிலிருக்கும் கோயில்கள் பழமையானவை. இங்குள்ள சொக்கட்டான் மண்டபம் எனும் சதுர வடிவான மண்டபம் பார்க்கத்தக்கது, 1623—1645 வருடங்களிற் கட்டப்பட்டது. இதன் மொத்த விஸ்தீரணம் சுமார் 4000 அடியாம்; அகலம் 17 அடி முதல் 21 அடி வரையில், உயரம் சுமார் 30 அடி; ஒவ்வொரு தூணும் சுமார் 12 அடி உயரம்; 5 அடி மேடையின்மீது வைக்கப்பட்டிருக்கிறது. இதைப்போன்ற பிராகார மண்டபம் இந்தியாவிலே வேறு கிடையாதென்னலாம். இப்பிராகார மண்டபத்தில் ஸ்வாமி எழுந்தருளும்போது காட்சி மிகவும் அழகா யிருக்கும். கோயிலின் மண்டபங்களிலும், பிராகாரங்களிலும் ராமநாத் சேதுபதிகளின் உருவங்கள் நிர்மாணிக்கப்பட் டிருக்கின்றன. கோயிலில் ஆதியில் கருங்கல்லினாற் கட்டப்பட்ட கட்டடங்களுக்கு கருங் கற்கள் சிங்களத்திலிருந்து கொண்டுவரப்பட்டதாக எண்ணப்படுகிறது. பிறகு கட்டப்பட்ட பாகங்களெல்லாம் மணற்கல்லாலானவை. உள் பிராகாரம் மதுரை நாயகர்களால் கட்டப்பட்டது. வெளி மண்டபம் ராமநாத சேதுபதியால் கட்டப்பட்டது. கோபுரங்களில் மேற்கு கோபுரம் மாத்திரம் பூர்த்தியாயிருக்கிறது; மற்றவைகள் அரைகுறையாயிருக்கின்றன. வெளி மதில் 612 x 868 அடி. மேற்கிலிருந்து உட்புறம் போகும்போது வலதுபுற மிருக்கும் தோட்டத்திலுள்ள விமானம் 11-ஆம் நூற்றுண்டிற் கட்டப்பட்டது; 50 x 30 x 40 அடி. கோயிலிலுள்ள சிறிய விமானம் இக்காலத்தில் கட்டப்பட்டதாம். கோயிலுக்கு சுமார் 80 லட்சம் ஸ்திதியுண்டு. மாசி மாதம் பிரம்மோற்சவம், ஆடிமாதம் அம்மன் உற்சவம், அம்மன் தபசு, திருக்கலியாணம், விசேஷம். தினம் அர்த்தஜாம பள்ளியறை உற்சவம் பார்க்கத்தக்கது. ராமநாதஸ்வாமி கர்ப்பக் கிரஹத்தில் பலகல்வெட்டுகள் உள. கோயிலுக்குள் மாதவ புஷ்கரிணி என்று ஒரு தீர்த்தம் உண்டு. இங்கு

அருகாமையில் மூத்துராமலிங்கஸ்வாமி கோயில் என்று மற்றொரு சிவாலய முளது; இது தற்காலத்திய தனுஷ்கோடிக்கு 3 மைல் மேற்கிலுள்ளது. ராமேஸ்வரம் ரெயில் ஸ்டேஷனுக்கு 8 மைல் கிழக்கிலுள்ளது. கர்ப்பக்கிரஹம் 10 அடி சதுரம். இதுவும் அர்த்த மண்டபமுந்தானிருக்கின்றன, மற்றபாகம் கிலமாகிவிட்டது; விமானம் பாழாகிவிட்டது இதுதான் பழய தனுஷ்கோடி யென்றும் இங்குதான் முற்காலத்தில் சேதுஸ்நாநம் செய்வது வழக்கமென்றும் சிலர் எண்ணுகின்றனர். இங்கு காசிவிஸ்வநாதர் விசாலாட்சி கோயில் ஒன்றுண்டு. இக்கோயிலில் இருந்த சில பழய கல்வெட்டுகள் அழிக்கப்பட்டன. பழய கர்ப்பக்கிரஹம் 190 x 307 அடி. இங்குள்ள கந்தமாதன பர்வதத்திற்கருகில் ஒரு சிவாலய மிருக்கிறது. ராமநாதபுரம் ராஜா சத்திரம், முகுந்தராயர் சத்திரம், வீரப்ப செட்டியார் சத்திரம், தஞ்சாவூர் ராஜா சத்திரம், மகபீர் தர்மசாலை; முதலிய சத்திரங்கள் உள. முசாபர் பங்களா உண்டு.

**ராமேஸ்வரம்**—கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்,—ராமலிங்கஸ்வாமி—ஸ்ரீராமர் மணலினால் பிரதிஷ்டை செய்த பிறகு கல்லாய் மாறியதென்பது ஐதிகம். பெண்ணைக் கரையிலுள்ளது; சித்திரை மாதம் பிரம்மோற்சவம்,—இக்கோயிலில் 940 வருடத்திய கல்வெட்டுகள் உள.

**ராயகோடி**—சென்னை ராஜதானி, கடப்பை ஜில்லா, சிவாலயம்; ஸ்வாமி உக்கிர வீரபத்திரர்.

**ராய்பூர்** ஜில்லா—மத்திய மாகாணம்—இங்குள்ள சிவாலயங்கள் (1) ருத்ரி கிராமம் சிவாலயம்—ஸ்வாமி ருத்ரேஷ்வர் மஹாதேவ். (2) சிஹாவா கிராமம்—காரணேஸ்வரர் கோயில்—இங்கு ரிஸ்யசிருங்கர் ஆசிரமம் இருந்ததாகச் சொல்லப்படுகிறது, மாசிமாதம் பிரபல உற்சவம். (3) சிர்பூர் கிராமம் கந்தேஷ்வர் கோயில்—1000 வருடங்களுக்குமுற்பட்ட ஆலயம், பிறகு புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. (4) சம்பாஜர் கிராமம் சிவாலயம்—ஸ்வாமி சம்பேஷ்வர்; லிங்கத்தில் கோடுகள் இருக்கின்றன; இவற்றால் அது மூன்று பிரிவாக்கப்பட்டிருக்கிறது, ஒன்றில் கணேசர் உருவமும், மற்றொன்றில் பார்வதி உருவமும் இருக்கிறது, மத்தியிலிருப்பது மஹாதேவர்,—பார்வதிக்கு ஆடுகளைப் பலி கொடுக்கின்றனர். (5) கோப்ரா கிராமம் சிவாலயம், ஸ்வாமி கோபேஷ்வர் மஹாதேவ் (6) குன்வாரா கிராமம், பாழடைந்த சிவாலயம்—18½ சதுரம்—

பூஜையில்லை. (7) நாராயணபூர் கிராமம் பழய சிவாலயம். (8) ராகீம் கிராமம், இங்கு ராமேஜஷ்வர் கோயில், தானேஷ்வர் கோயில் என்று இரண்டு சிவாலயங்கள், விஷ்ணு கோயிலின் பக்கத்திலிருக்கின்றன. (9) கூடலேஷ்வர் கோயில்—மஹாநதி பாய்லி சங்கமமாகுமிடம்—சிவாலயம் இவைகளன்றி மற்ற சிவாலயங்கள்—பாவனேஷ்வர் கோயில், பிங்கேஷ்வர் கோயில், பாதேஷ்வர் கோயில்.

ராயச்சூடி—கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி; இதன் பழய பெயர் ராஜ வீடு வீரபத்ரஸ்வாமி கோயில்; ரதோற்சவத்தின் காலே விக்ரஹத்தின் நெற்றியில் மூன்றுவது கண்ணுக்குப் பதிலாக ஒருபெரிய கெம்பு வைக்கப் படுகிறது.

ராயதுர்க்கம் — பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி, ஜம்புகேஸ்வர ஸ்வாமி கோயில்.

ராயபுரம்—புதுக்கோட்டை சமஸ்தானம், சென்னை ராஜதானி, திருமெய்யம் தாலூகா, சிவாலயம்—ஸ்வாமி சுந்தரேஸ்வரர், தேவி மீனாட்சியம்மன்.

ராஜ்கோட்—வட இந்தியா ரெயில்ஸ்டேஷன்—சிவாலயம், ஸ்வாமி ராம்நாத் மஹாதேவர்.

ராஜ்சாஹி பிரிவு—வங்காள ராஜதானி, இங்கு கலம் எனும் ஊரில் ஒரு சிவாலயமுளது.

ராஜ்பூர்—வட இந்தியா, வார்தாவிலிருந்து போக வேண்டும். இங்கு பல சிவாலயங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

ராஜங்குடி—திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்—இடிந்துபோய் விட்டது; சிவலிங்கம் மாத்திரம் இருக்கிறது.

ராஜசிங்க மங்கலம் — ராம்நாட் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்; ஸ்வாமி நாதஸ்வாமி—கோயில் வரகுணபாண்டியனல் கட்டப்பட்டதென்பது ஐதிகம்.

ராஜமஹேந்திரபுரம்—கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி, கிழக்கு இந்தியா ரெயில்ஸ்டேஷன், சிவாலயம் —ஸ்வாமி கோடிலிங்கேஸ்வரர் தேவி பார்வதி, ஒருலிங்கம் தான் வெளியில் இருக்கிறது; மற்றவை மணலில் மறைந்திருப்பதாக ஐதிகம். இங்கு ஈஸ்வரன் கோயிலின் கிழக்கு பக்கம் ஒருவிஷ்ணு கர்ப்பக்கிரஹம் இருக்கிறது. ஸ்ரீராமர் ராவண சம்ஹார பாவம்தீர லட்சம் லிங்கங்களைப் பிரதிஷ்டை செய்து பூசித்ததாக ஸ்தல மஹாத்மியம். இதற்

கருகில் மார்க்கண்டேய ஸ்வாமி கோயிலிருக்கிறது; சிறியது; மார்க்கண்டேயர் பூசித்த ஸ்தலம். இங்கு கல்யாண மண்டபத்தில் நான்கு யாளித் தூண்கள் இருக்கின்றன. மேற்கண்ட இரண்டு கோயில்களின் சிகரங்களிலும் கலசத்திற்கு பதிலாக சிவபெருமானது திரிசூலம் வைக்கப்பட்டிருக்கிறது. அகண்ட கோதாவரி தீர்த்தம். இங்கு புதிய சத்திரம் ஒன்றுண்டு.

**ராஜகிரஹம்**—வட இந்தியா, ஜம்வான் ரெயில்ஸ்டேஷனுக்கு சமீபமுள்ளது. சிவாலயம் மலைமீது இருக்கிறது.

**ராஜபாளையம்**—ராம்நாட் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்—ஸ்வாமி மயூரநாதர்.

**ராவல்பிண்டி**—வட இந்தியா, ரெயில் ஸ்டேஷன் சிவாலயம்.

**ரிஷப மலை**—ஹோசூர் தாலூகா, சேலம் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம்.

**ரிஷிவந்தியம்**—தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம்—ஸ்வாமி அர்த்தநாரீஸ்வரர். இங்குள்ள மண்டபம் திருமலை நாயகரால் கட்டப்பட்டது.

**ரிஷீகேசம்**—வட இந்தியா, ஹரித்வாரத்துக் கருகிலுள்ளது—சிவாலயம்.

**ருத்திரகோடி** — வட இந்தியா சிவாலயம், சுயம்பு லிங்கம்—ஸ்வாமி மஹாயோகீஸ்வரர்.

**ருத்திரப்பிரயாகை** — வட இந்தியா, பத்ரிநாத்திலிருந்து போகவேண்டும்—சிவாலயம். இதனருகில் **மணிபலேஷ்வர்** எனும் சிவாலயமுண்டு.

**ரேவா சமஸ்தானம்**—மத்திய இந்தியா, இங்குள்ள சிவாலயங்கள் (1) **ரேவா பட்டணம்**—இதற்கு 8 மைல் தூரத்தில் பெயிஜ்நாத் (வைத்யநாத்) சிவாலயம்; 1884ஙு இதன்மேல் பாகம் இடிந்து விழுந்துவிட்டது. (2) **கேலடி, குண்ட்** கிராமம், குகைக்கோயில்—சிவாலயம். (3) **முகுந்த்தபூர்** கிராமம் இங்கு சகுல்கோவான் எனுமிடத்தில் ஒரு சிவாலயமுளது. (4) **மான்கன்ஜ்** பிரிவில் தேவ்தலாவ் கிராமத்தில் சோமநாதர் கோயில். (5) **ராம்நகர்** கிராமம்—நார்வாஸ்தாசில், சிவாலயம். (6) **ரகுராஜ்நகர்** சிறு கிராமம்—பியாவான் தாசில்—அர்க்க லிங்கேஸ்வரர் ஆலயம்.

**ரேஷ்ட்**—ஐரோப்பா கண்டம், ருஷ்யா தேசம், காஸ்பியன் கடற்கரையிலுள்ளது. இங்கு ஒரு சிவாலயமிருப்பதாக இண்டியன் ஆன்டிக்குவரி பத்திரிகையில் சொல்லப்

பட்டிருக்கிறது. கோயிலில் கணேசர் முதலிய சிலைகள் உள. கராச்சியிலிருந்து இதற்கு சிவபிராம்மண குருக்கள் 10, 15 வருடங்களுக்கு ஒருமுறை போய் வருகிறார்.

**லக்குண்டி**—தார்வார் ஜில்லா, பம்பாய் ராஜதானி, கடக் ஸ்டேஷனிலிருந்து 7 மைல் கிழக்கு, பழய பெயர் லொக்குகுண்டி—சிவாலயம் பாழடைந்திருக்கிறது. **காசி விஸ்வேஸ்வர்** ஸ்வாமி; இரண்டு கோயில்கள் ஒன்றாய்க் கட்டப்பட்டிருக்கின்றன. ஒன்று கிழக்கு பார்த்தது சிறியது, மற்றொன்று மேற்கு பார்த்தது, பெரியது. பழய கோயில் புதுப்பிக்கப்பட்டது. இங்குள்ள கோயில் வாயிற் படிகள் மிகவும் அழகிய நுட்பமான சில்பவேலை அமைந் தவை—5 அடி 8 அங்குலம் உயரம், 2 அடி 9 அங்குலம் அகலம். நடுவில் பார்வதி பரமசிவமும், பக்கங்களில் மஹாவிஷ்ணு பிரம்மாவும் செதுக்கப்பட்டிருக்கின்றன. இங்கு நந்தேஷ்வரர் சிவாலயம் என்று மற்றொன்று உளது.

**லட்சுமணபுரி**—இது ஆங்கிலத்தில் லக்னௌ என வழங்கப்படுகிறது. வட இந்தியா ரெயில்ஸ்டேஷன்—சிவா லயம், ஸ்வாமி மஹாதேவர்.

**லாகி**—தாடு ஜில்லா, சிந்து மாகாணம், வட இந்தியா சிவாலயம்.

**லாம்** கிராமம்—குண்டூர் தாலூகா, சென்னை ராஜ தானி, கிருஷ்ணா ஜில்லா; சிவாலயம்.

**லால்குடி** — வைப்புஸ்தலம்—சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ளது. ரெயில்ஸ்டேஷன்—சிவாலயம்—ஸ்வாமிசப்தரிஷீஸ்வரர், தேவிஸ்ரீபதி, கொள் ளிட தீர்த்தம். இவ்வூருக்கு **திருத்தவத்துறை** அல்லது **திருத்துறை** என்று பெயர் உண்டு கோயில் இரண்டு பிராகாரமுடையது. 1070ௐ **ஆண்ட** கோபரகேசரி வர்மன் எனும் சோழ அரசன் காலத்திய கல்வெட்டுகள் உள. முக்கிய உற்சவங்கள் மார்கழி மாதமும், பங்குனி மாதமும். இதற்கு 3 மைல் தூரத்தில் **திருமணல்பேதி** என்னும் சிவாலயம் உண்டு; பழய சோழ கட்டடம். விக்ரம சோழன் (1112—1117) காலத்திய கல்வெட்டுகள் உடையது. இதற்கருகிலுள்ள சிவாலயங்கள்—விடை யாற்றுமங்கலம், சென்னிவாய்க்கால், ஆதிகுடி, அரியூர், ஆலம்பாக்கம், புள்ளம்பாடி, முதலிய இடங்களில் உள.

**லாஹுர்**—வட இந்தியா, பஞ்சாப்பிலுள்ளது—சிவா லயம், ஸ்வாமி மஹாதேவர், பைரவருக்கும் இங்கு கோயில்

உண்டு. காசியிற்போல் மகம்மதியர் கிறிஸ்தவர் தவிர மற்றவர்களெல்லாம் லிங்கபூஜை நேராகச் செய்யலாம்.

**லிங்கம்பல்லி** — சென்னை ராஜதானி, வட சர்க்கார் பிராந்தியம்—புதிய சிவாலயம்.

**லிங்கேஸ்வரர்**—வட இந்தியா, சுயம்புலிங்கம்; ஸ்வாமியின் பெயர் வரதேஸ்வரர்.

**லிம்டி**—வட இந்தியா, ரெயில் ஸ்டேஷன்—சிவாலயம்—ஸ்வாமி பீமநாதர், பீமனால் பூசிக்கப்பட்ட ஸ்தலம் என்பது ஐதிகம். சிவராத்ரி விசேஷம்.

**லூடியானு** கிராமம் — பஞ்சாப் மாகாணம்; வட இந்தியா—இங்குள்ள சிவாலயங்கள் (1) சம்பா கிராமம் சந்திரகுப்தர்கோயில், கௌரிஷங்கர் கோயில்; பித்தளையாலாகிய சிவ விக்ரஹம், பார்வதியுடன் இருக்கிறது. திருமுக்கோயில். இரண்டும் புதிய கோயில்கள், (2) பிராமார் கிராமம், சம்பா சமஸ்தானம், சிவாலயம்—ஸ்வாமி மணிமஹேசர், மேருவர்மனால் சுமார் 700 வருடங்களுக்குமுன் கட்டப்பட்டது.

**லேபாட்சி** — அநந்தபுரம் ஜில்லா, சென்னை ராஜதானி, ஹிந்துபூருக்கு 9 மைல் கிழக்கு; கூர்ம சைலக்குன்று—சிவாலயம், விஜயநகர் அரசர்காலத்தில் 1538ஹு விருபண்ணா என்பவரால் கட்டப்பட்டது. ஸ்வாமி வீரபதர ஸ்வாமி, நரகண்டேஸ்வரர். வீரேஸ்வரர்கோயில் குன்றின் மீதுள்ளது. கல்யாண மண்டபம் அழகியது, முடிக்கப்படவில்லை. இங்குள்ள மஹா மண்டபம் அழகிய சில்பமமைந்தது; 64 தூண்களால் தாங்கப்பட்டது. மண்டபத்தின் கூரையில் மஹா பாரத ராமாயணக் கதைகள் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. இங்குள்ள ஒரு சிலையின் கண் எந்தப்பக்கமிருந்து பார்த்தாலும் அதுநேரில் பார்ப்பதுபோலிருக்கிறது. கர்ப்பக்கிரஹத்திற்கு தெற்கில் ஒரே கல்லில் செதுக்கப்பட்ட ஒரு பெரிய நாகலிங்கம் உண்டு. இங்குள்ள நந்தி தஞ்சாவூர் கோயில் நந்தியைப் போல் பெரியது; 15 அடி உயரம் 27 அடி நிகளம். இங்கு சாங்தேஸ்வரர் கோயில் என்று மற்றொரு சிவாலயமுளது.

**லோதுகெட்டா**—விசாகபட்டணம் ஜில்லா, சென்னை ராஜதானி, இங்கு முற்றிலும் கருங்கற்களால் கட்டப்பட்ட 4 சிவாலயங்கள் உள.

**லௌரியா** கிராமம் — வடக்கு இந்தியா சிவாலயம், ஸ்வாமி பெயர் மஹாதேவர், அருராஜ். (ஹாராஜ்?)

**லோனட்**—வட இந்தியா சிவாலயம், திராவிட சில்பம்—ராமேஸ்வர ஸ்வாமி; கி.பி. 12-ஆம் நூற்றாண்டு கோயில்; சிகரமும் மண்டபமும் இடிந்து போயிருக்கிறது. சிவலிங்கம் பூமி மட்டத்தின்கீழ் இருக்கிறது.

**லோனிகண்ட்**—பூனா ஜில்லா, பம்பாய் ராஜதானி, சிவாலயம்—ஸ்வாமி ஜோகேஷ்வர், இங்கு மஹாதேவர் கோயில் என்று மற்றொரு சிவாலயமுண்டு.

**வக்கணபுரம்** — வேலூர் தாலூகா, வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

**வக்கரை**—(திரு) தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, புதுச்சேரிக்கு 15 மைல் மேற்கு, விழுப்புரத்திலிருந்து 15 மைல்; ஸ்வாமி சந்திரசேகரேஸ்வரர், தேவி வடிவாம்பிகை அல்லது அமிர்தாம்பிகை, வக்கிரதீர்த்தம், சந்திர தீர்த்தம், பிரம்ம தீர்த்தம்; சந்திரன், குண்டலமா முனி, வக்கிராசுரன் பூசித்த க்ஷேத்திரம். சிவலிங்கத்தில் சிவபெருமானது முகங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. கோபுரம் 7 நிலைகளுடையது. தற்கால ஆலயம் 9-ஆம் நூற்றாண்டில் கண்டராதித்யர் மனைவி செம்பொன்மா தேவியாரால் கருங்கல்லால் கட்டப்பட்ட தென்பர். அதற்கு முன்பு மரத்தால் அல்லது செங்கற்களால் கட்டப்பட்ட கோயிலா யிருந்திருக்கலாம்.

**வங்கமல்லா**—கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி. இங்கு மால்கொண்டா எனும் மலையின்கீழ் மல்லேஸ்வர ஸ்வாமி கோயில்.

**வட்லமுடிபல்லி**—நெல்லூர் ஜில்லா, சென்னை ராஜதானி, கோடேஸ்வர ஸ்வாமி கோயில்; சுமார் 200 வருடங்களுக்குமுன் வெங்கடப்பா என்பவரால் கட்டப்பட்டது.

**வடதளி**—சென்னை ராஜதானி (தஞ்சாவூர் ஜில்லா?) சிவாலயம் ஸ்வாமி வடதீஸ்வரர் தேவிஞானம்பிகை, விஸ்வ தீர்த்தம், விஸ்வாமித்திரர் பூசித்த க்ஷேத்திரம், சமணரால் மூடியிருந்த லிங்கம் அப்பர் பாடியதால் வெளிவந்த தென்பர்.

**வடக்கன்சேரி**—மேற்கு இந்தியா, பாலக்காடு தாலூகா, மலபார் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம்.

வடதில்லை—சென்னை ராஜதானி சிவாலயம்; ஸ்வாமி பாபஹரேஸ்வரர் தேவி மரகதவல்லி, ஆரணி நதி தீர்த்தம்.

வடரங்கம்—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம்; இங்குள்ள வீணை தட்சிணாமூர்த்தி அழகியது.

வடபேரூர்—சென்னை ராஜதானி, மூசிறிக்கு 8 மைல் சிவாலயம்; வைப்புஸ்தலம்.

வடிவீஸ்வரம்—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, கன்யாகுமரிக்கு 8 மைல் சிவாலயம், தேவீஸ்வரர் அழகியநாயகி, சமுத்திர தீர்த்தம்—தேவி பூசித்தபடியால் அப்பெயர் பெற்றது.

வண்டலூர்—சென்னை ராஜதானி, செங்கல்பட்டு ஜில்லா, இங்குள்ள விஷ்ணு ஆலயம், ஓர் பழய சிவாலயத் தின்மீது கட்டப்பட்டதாக எண்ணப்படுகிறது.

வடுகூர்—(திரு) ஆண்டார் கோயில் எனவும் வழங் கப்படுகிறது. சின்னபாபு சமுத்திரம் ஸ்டேஷனுக்கு 2 மைல் மேற்கு, சென்னை ராஜதானி, வைரவர் உக்ரவீர்ய ரிஷி பூசித்த க்ஷேத்திரம், ஸ்வாமி வடுகேஸ்வரர் தேவி வடுவகிர்க் கண்ணியம்மை, பெண்ணை நதி தீர்த்தம்; தென் இந்தியா ரெயில்ஸ்டேஷன், கண்டமங்கலத்திற்கு 2 மைல் வடுகனாகிய பைரவர் பூசித்தமையால் வடுகூர் எனப்பெயர் பெற்றதென்பர். திருஞானசம்பந்தர் பாடல்பெற்றது.

வந்தவலை — திருவந்தவலை எனவும் அழைக்கப்படு கிறது. சிவாலயம்; ஸ்வாமி கோகர்ணீஸ்வரர், தேவி உமையம்மை, காமதேனு பூசித்த க்ஷேத்திரம்.

வந்தவாசி—வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜ தானி சிவாலயம், ஸ்வாமி சுயம்பீஸ்வரர்; லிங்கம் சிதை வுண்டிருக்கிறது; சிவதீர்த்தம். கோயில் பாண்டிய அரசனாற் கட்டப்பட்டதென்பர். ஜலகண்டேஸ்வரர் கோயில்—கோயி லில் விஷ்ணுவின் விக்ரஹமும் தற்காலம் ஆராதிக்கப் படுகிறது.

வருணு—மைசூர் ராஜ்யம், மைசூர் பிரிவு, ராமேஸ் வரர் கோயில்; சளுக்கிய கட்டடம்.

வல்லம்—(திரு) திருவலம், திருவல்லம்—என்றும் தற் காலம் வழங்கப்படுகிறது. வடஆற்காடு ஜில்லா, குடியாத் தம் தாலூகா, சென்னை ராஜதானி, ரெயில்ஸ்டேஷன்— ஆற்காடுக்கு 8 மைல் தூரம். வல்லாளன் எனும் அரசன், நவக்கிரஹங்கள், பூசித்த க்ஷேத்திரம். ஆசாரனென்னும்

அசுரனை சங்கரித்த ஸ்தலம், ஸ்வாமி வல்வநாதேஸ்வரர் தேவி வல்லாம்பிகை; கௌரிதீர்த்தம், சிவகெங்கை, நீவாநதி, வஜ்ர தீர்த்தம். இந்திரன் அகல்யையைப் புணர்ந்த சாபம் தீர இத்தீர்த்தத்தை யுண்டுபண்ணினன் என்பது ஐதிகம். ஸ்வாமி ஜனக மஹாராஜாவுக்கு காட்சி கொடுத்தருளிய க்ஷேத்திரம். நந்தி கிழக்கு முகமாயிருக்கிறது; ஸ்வாமி மேற்குமுகம்; திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. இங்கு வில்வநாதேஸ்வரர் கோயில் என்று மற்றொரு சிவாலயமுளது. இக்கோயிலுக்குள் நடுவேஸ்வரர் எனும் சிறிய சிவாலயம் உண்டு. பிரம்மோற்சவம் தை மாசம்.

வல்லம்—செங்கல்பட்டு ஜில்லா சென்னை ராஜதானி, செங்கல்பட்டுக்கு 2 மைல்-குகைக் கோயில், முதல் மஹேந்திரவர்மன் காலத்தியது—600 - 625 கி.பி. பல்லவ சில்பம்; லிங்கம் திரண்ட உருவுடையது. வில்வநாதேஸ்வரர் கோயில் பாலாற்றின் கிளையாகிய நீவாநதியின் கரையிலுள்ளது. இங்கு கி. பி. 888 வருஷத்திய கல்வெட்டும் கி. பி. 11-ஆம் நூற்றாண்டின் கல்வெட்டொன்றும் உளது. இங்கு பழய கோயில் ஒன்று இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

வல்லம்—கிராமம்—திருவாங்கூர் ராஜ்யம்; சிவாலயம். இங்கு விஷ்ணுவுக்கும் பிரம்மாவுக்கும் சந்நிதிகளுண்டு.

வல்லிக்குடி—கிராமம்—சென்னை ராஜதானி சிவாலயம்; ஸ்வாமி கலியாணசுந்தரேஸ்வரர் தேவி பெரியசுகந்த நாயகி, கலியாண தீர்த்தம்.

வல்லிபுரம்—திருக்கழுக்குன்றம் தாலூகா, செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம்.

வல்லிபுரம்—சென்னை ராஜதானி, கருவூருக்கு 20 மைல், சிவாலயம். ஸ்வாமி சங்கரநாராயணர் காமகிரியம்மை.

வலஞ்சுழி—(திரு) தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சுந்தரப்பெருமாள் ஸ்டேஷனுக்கு 1 மைல் கிழக்கு; ஸ்வாமிமலைக்கு 2 மைல் தூரம், காவிரியானது முக்காலத்தில் வலமாய்ச் சுழித்துக்கொண்டு போனபடியால் அப்பெயர் பெற்றது; தேவேந்திரன் பூசித்த க்ஷேத்திரம், ஸ்வாமி கற்பகநாதேஸ்வரர், சித்தீசர்; தேவி பெரியநாயகி, நித்தியாநாயகி; தீர்த்தங்கள் காவிரி, வலஞ்சுழி தீர்த்தம், ஜடா தீர்த்தம், அறுபத்தாறுகோடி தீர்த்தம். கோயில்

பழய சோழ கட்டடம், ஸ்வாமிக்கு கபர்தீஸ்வரர் என்றும் பெயர் உண்டு. ஹேரண்ட முனிவர் பூசித்த ஸ்தலம், காவிரி நதியான கபிலத்துவாரத்தின் வழியாக பாதாளம் போனதைத் தடுத்து, மறுபடியும் பூமியில் பாயும்படியாகச் செய்ததால், இம்முனிவருக்கு இக்கோயிலில் பூஜை நடக்கிறது. கோயிலில் பிலத்வாரத்திய த்ருணைவர்த்த ஈஸ்வரரும் ஏரண்ட முனிவரும் வீற்றிருக்கின்றனர். அமிர்தமதன காலத்தில் இந்திரன் அமுதம் திரளும்படி விநயகரை வெள்ளைப் பிள்ளையாராகப் பூசித்ததாக ஐதிகம். சிவாலயம் விநயகர் கோயிலுக்குப் பின் உள்ளது. அம்பிகை ஒற்றைக்காலால் தவம்புரியும் சிலைபார்க்கத்தக்கது. அதற்குப் போகும் வழியில் சிறு கோபுரத்தின் மத்தியில் விஷ்ணுவின் சிலை யிருக்கிறது. ஸ்வேத விநயகர் கோயிலுக்குமுன் புள்ள கல்லாலமைந்த பலகணி சிறந்த சில்பவேலையமைந்தது; 10 அடி உயரமுள்ளது, 6 அடி அகலம். இக்கோயில் முற்காலம் ஜைனக் கோயிலா யிருந்ததென எண்ண இடமுண்டு. இங்கு கருங்கற்களாலான சில பெரிய தீபங்கள் உண்டு. குதிரைகளால் இழுக்கப்பட்ட ரதம்போன்ற கோயில்; விமானம் மிகவும் அழகிய சில்பவேலை பெற்றதாம். ராஜராஜேஸ்வர சோழன் இங்கு க்ஷேத்திர பாலகேஸ்வரர் கோயிலைக் கட்டுவித்தான். கோயிலில் 1050—63 வருஷத்திய கல்வெட்டுகள் இருக்கின்றன. இங்குள்ள விநயகருக்கு ஸ்வேத விநயகர் என்று பெயர்; மிகவும் வரப்பிரசாதி; அபிஷேகம் கிடையாது, புனுகு சட்டம் மாத்திரம் சாற்றுகிறார்கள். சதுர்த்தி தினம் இந்திர பூஜை. சனி பகவான் இங்கு கிழக்கு நோக்கியுள்ளார்.

**வலம்புரம்**—(திரு) மேற்கு பெரும்பள்ளம் என்று வழங்கப்படுகிறது. திருநனிப்பள்ளிக்கு 11 மைல், சென்னை ராஜதானி. மஹாவிஷ்ணு இங்கு சிவபெருமானைப்பூசித்து வலம்புரிச் சங்கம் பெற்றதாக ஐதிகம். சீர்காழிக்கு 8½ மைல்; ஸ்வாமி வலம்புரிநாதேஸ்வரர், தேவி வடுவகிர் கண்ணியம்மை, பிரமதீர்த்தம். பிரம்மோற்சவம் தை மாசம். ஏரண்ட ரிஷி முக்திபெற்ற க்ஷேத்திரம். மூவர் பாடல் பெற்றது.

**வலிய உதேஸ்வரம்** — திருவாங்கூர் ராஜ்யம்-சிவாலயம்.

**வலியகொய்க்கல்**—திருவாங்கூர் ராஜ்யம், வேட்டம் குமாரன் கோயில், பரமசிவம் வேடன் உருவில் காட்சி கொடுத்த ஸ்தலம்.

**வலிவலம்**—திருவாரூரிலிருந்து 6 மைல் தென் கிழக்கு; சென்னை ராஜதானி, கன்றாப்பூருக்கு 2 மைல் தெற்கு, சூரியன், காரணரிஷி, கரிக்குருவி பூசித்த ஸ்தலம்; ஸ்வாமி மனத்துணை நாதேஸ்வரர், தேவி வாளையங்கண்ணியம்மை, சங்கர தீர்த்தம், காரணகங்கை; புன்னைவிருட்சம் மூவர் பாடல்பெற்றது.

**வழுவூர்** — பழுவூர் எனவும் அழைக்கப்படுகிறது. மாயூரம்—திருவாரூர் ரெயில் மார்க்கத்தில் மங்கைநல்லூர் ஸ்டேஷனுக்கு 1 மைல். தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். இக்கோயிலிலுள்ள வெண்கலத்தாலாகிய கஜசம்ஹாரமூர்த்தி மிகவும் அழகியது. அதிகாரநந்திகரும் வெண்கல விக்ரஹம் உண்டு. கயாசுரனுகிய யானையை உரித்த ஸ்தலம், சுவாமி மரவுரிநாதர் தேவி வனமுலையம்மை, சிவகங்கை. அஷ்டவீரட்டானங்களில் ஒன்று. கோபுரமும் பிராகார மதிலும் அழகப்பெருமாள் பிள்ளையால் கட்டப்பட்டது. மாசி மாசத்தில் பெரிய உற்சவம். தாருகாவனத்து ரிஷிபத்தினிகளின் ஆடை நழுவியதால் வழுவூர் எனப் பெயர் பெற்றதென்பர். தீர்த்தம் பஞ்சப்பிரமம்.

**வள்ளலார் கோயில்**—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சிவாலயம்; சாமுண்டி பூசித்த ஸ்தலம், மாயவரத்திற்கருகிலுள்ளது.

**வள்ளிமலை**—சென்னை ராஜதானி, இங்கு ஆதியில் ஜைன கோயிலாயிருந்தது சிவாலயமாக மாற்றப்பட்டதாம்.

**வளையன்குடி**—திருவளயன்குடி என்று அழைக்கப்படுகிறது, சென்னை ராஜதானி சிவாலயம்; இளையான்குடி நாயனார் பூசித்த ஸ்தலம்.

**வளர்புரம்**—வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி தாண்டவேஸ்வரர். கோயில் குறும்பர் காலத்தில் கட்டப்பட்டதென்பர், பல கல்வெட்டுகள் உள.

**வன்னியூர்**—(திரு) சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, திருவீழிமிழலைக்கு 2 மைல் வடமேற்கு; அக்னிதேவர் பூசித்த க்ஷேத்திரம், எனவே வன்னியூர் என்று பெயர் பெற்றது. ஸ்வாமி அக்னீஸ்வரர் தேவி பார்வதியம்மை, அக்னி தீர்த்தம், குற்றாலத்திலிருந்து 8 மைல்; ஆனைதாண்டவபுரத்திற்கு 4 மைல் மேற்கு. இவ்வூர் பொன்

னூர் எனவும் வழங்கப்படுகிறது. அப்பர் பாடல் பெற்றது.

**வந்தம்பாலை**—சென்னை ராஜதானி, சிவாலயம்—இதற்கு உத்தரகோகர்ணம் என்றும்பெயர்; விறன்மீண்ட நாயனார் சரித்திர சம்பந்தமானது.

**வலங்கிமான்** — சென்னை ராஜதானி தஞ்சாவூர் ஜில்லா; கும்பகோணத்திற்கு 5 மைல்—சிவாலயம்.

**வரகூர்** — திருவாகுடம்தோன்றி மாடம்—சென்னை ராஜதானி, சீர்காழிக்கு 6 மைல்; ஸ்வாமி சுயம்புநாதேஸ்வரர் தேவி குலகாந்திதேவி (?) அநந்தபுஷ்கரிணி; இந்திரன் பூசித்த ஸ்தலம்.

**வாசுதேவநல்லூர்**—திருநெல்வேலி ஜில்லா சென்னை ராஜதானி, சிவாலயம்; ஸ்வாமி சிந்தாமணிநாதர்.

**வாஞ்சியம்**—(திரு) சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, நந்நிலம் ஸ்டேஷனுக்கு 2 மைல மேற்கு, விஷ்ணு பூசித்து தன்னைப் பிரிந்த லக்ஷ்மியைப் பெற்ற ஸ்தலம். ஸ்வாமி வாஞ்சிநாதர், வாஞ்சிலிங்கேஸ்வரர்; தேவி மங்கள நாயகி, வாழவந்தநாயகி, கூப தீர்த்தம், சூரிய தீர்த்தம்—கூப தீர்த்தத்தில் கார்த்திகை ஞாயிறுகளில் குளித்தால் எமவாதனை இல்லையென்பது ஐதிகம் இத்தலத்தில் மரிப்பவர்களுக்கு எமவாதனை கிடையாதென்பது ஸ்தல புராணம். காசிக்குச் சமானமாகச் சொல்லப்படுகிறது. தெற்கு பிரபல க்ஷேத்திரங்களில் இது ஒன்றாகும், மூவர் பாடல் பெற்றது. இங்கு எமனுக்கு ஒரு கோயிலுண்டு, நாககன்னிகை இறைவனைத் தழுவி சாயுஜ்ய மடைந்ததால் அப்பெயர்பெற்றது.

**வாட்போக்கி** — ரத்னகிரி, மாணிக்கமால் என்றும் அழைக்கப்படுகிறது. சென்னை ராஜதானி; குளித்தலை ஸ்டேஷனுக்கு 5 மைல் தெற்கு, பரமசிவம் ஒரு சோழ அரசன் எதிரில் நவரத்னங்கள் தோன்றும்படி செய்த ஸ்தலம். அவ்வரசன் தற்கொலைபுரிய தன் வாளை ஓங்க, அதை மறைந்துபோகும்படி செய்தபடியால் வாட்போக்கி எனப் பெயர்பெற்றது. கோயில் மலைமீது உளது. ஸ்வாமி ரத்னகிரீஸ்வரர், தேவி சுரும்பார் குழலம்மை. கௌரி தீர்த்தம்; அப்பர் பாடல்பெற்றது; இங்கு சுந்தரன் பொன்னடிப் பாறை என்று ஒரு பாறைஉளது.

**வாதவூர்**—மதுரை ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம் ஸ்வாமி வாதபுரீஸ்வரர், தேவி உமாதேவி, மாணிக்கவாசகர் பிறந்த ஸ்தலம், கோயில் கொஞ்சம்

பாழடைந்திருக்கிறது. ஏரிக்கரையில் புருஷாமிருக சிலை இருக்கிறது.

**வாமேஸ்வரம்**—வட இந்தியா சிவாலயம்; சுயம்பு லிங்கம், ஸ்வாமி ஜடிலேஸ்வரர்.

**வாய்மூர்**—(திரு) தென் திருவாய்மூர் என்றும் வழங்கப்படுகிறது, சென்னை ராஜதானி திருக்கோளிலுக்கு 3 மைல் கிழக்கு, திருவாரூரிலிருந்து 10 மைல் தென்கிழக்கு; சூரியன் பூசித்த க்ஷேத்திரம், முசுகுந்த சக்ரவர்த்தி ஸ்ரீ தியாகராஜப்பெருமானைப் பிரதிஷ்டை செய்த ஸ்தலங்களில் ஒன்று; ஸ்வாமி வாய்மூர்நாதேஸ்வரர், தேவி பாலினுநன்மொழியம்மை, சூரிய தீர்த்தம், சண்டமாருத தீர்த்தம், சப்தவிடங்க ஸ்தலங்களில் ஒன்று, தியாகர் நீலவிடங்கர் — கமலநடனம். திருநாவுக்கரசு நாயனாரும் திருஞானசம்பந்தரும் ஒன்றாய் தரிசித்த க்ஷேத்திரம். அவ்விருவர் பாடல்பெற்றது.

**வாங்காத்** — அல்லது வாணியாத்—காஷ்மீரத்தில் ஸ்ரீநகருக்கு 320 மைல் தூரம்; ஹரமுகம் எனும் மலையின் அருகிலுள்ளது. சிவாலயம்—ஸ்வாமி பூதேசர், கோயில் காஷ்மீர் சில்பம். கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்கு முன்பு கட்டப்பட்டது. உச்சஹாலன் (1101—1111) எனும் அரசனாற் புதுப்பிக்கப்பட்டது.

**வாயலூர்** — திருவாயலூர் என வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, கும்பகோணத்திற்கு 5 மைல் ஸ்வாமி யோகநாதேஸ்வரர், தேவி சௌந்தரநாயகி.

**வாயலூர்** — செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி, சதுரங்கபட்டணத்திற்கு 3 மைல், சென்னையிலிருந்து 45 மைல், கோயிலுக்குள் சிவபூஜை விஷ்ணுபூஜை, இரண்டும் நடக்கிறது. சிவாலயம் கஜப்ரிருஷ்டஆகிருதி, சோழ கட்டடம், கர்ப்பக்கிரஹத்தில் பல கல்வெட்டுகள் உள. ஸ்வாமி திரிபுரேஸ்வரர்.

**வாயலூர்**—தென் இந்தியா—வியாக்கபுரீஸ்வரர் கோயில்—பல்லவ கட்டடம்.

**வார்டா பிரிவு**—மத்ய மாகாணம்—இங்குள்ள சிவாலயங்கள் (1) அலிபூர் கிராமம் சிவாலயம் (2) டாகா கிராமம் குகைக்கோயில், ஸ்வாமி மஹாதேவர் சிவராத்ரிவிசேஷம்.

**வாரங்கல் கோட்டை**—மத்ய இந்தியா நிஜாம் ராஜ்யம் சம்புலிங்கேஸ்வரர் கோயில்; இது சுமார் 1150ம் வருஷம் கட்டப்பட்டதாம். இதன் நான்குபுரத்து வாயில்களிலு

நான்கு கீர்த்தி ஸ்தம்பங்கள் உள. பார்க்கத்தக்கவை, இங்குள்ள 1000 கால் மண்டபம் பார்க்கத்தக்கது. கோயில் பாழாயிருக்கிறது. இக்கோட்டைக்குள் பல சிவால யங்கள் இருந்தன; அவைகளெல்லாம் மகம்மதிய அரசர் காலத்தில் அழிக்கப்பட்டன.

**வாலிகண்டபுரம்** — திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்; கொஞ்சம் கிலமா யிருக் கிறது.

**வாலிபுரம்** — தென் இந்தியா சிவாலயம்-திருவாலீஸ் வரர் தேவி வரதாம்பாள், அக்னி தீர்த்தம், ஜனகர், தூர்வாசர், வாலி பூசித்த க்ஷேத்திரம்.

**வாலிபுத்தூர்**—தென் இந்தியா சிவாலயம்—ஸ்வாமி மாணிக்க ஈஸ்வரர் தேவி வண்டமர்பூங்குழலி, மாணிக்க தீர்த்தம், பிரம்ம தீர்த்தம்—விஷ்ணு பூசித்த ஸ்தலம்.

**வாலூர்** — கிராமம்—சென்னை ராஜதானி, சிவாலயம்; ஸ்வாமி மாவினதேஸ்வரர்; தேவி வன்மாலைநாயகி (?)

**வாழ்கொளிபுத்தூர்** — (திரு) வாளொளிபுத்தூர்; வாலம்புத்தூர் எனவும் வழங்கப்படுகிறது. தஞ்சாவூர் ஜில்லா சென்னை ராஜதானி—திருப்புன்கூருக்கு 2 மைல் மேற்கு; வைதீஸ்வரன் கோயிலிலிருந்து 5 மைல், நண்டு பூசித்த க்ஷேத்திரம், அன்றியும் மஹாவிஷ்ணு மாணிக் கத்தைவைத்து பூசித்த க்ஷேத்திரம்; ஸ்வாமி மாணிக்க வண்ணேஸ்வரர், தேவி வண்டார்பூங்குழலியம்மை, பிரம தீர்த்தம், வாகை விருட்சம். திருஞானசம்பந்தர் சுந்தரர் பாடல் பெற்றது.

**வாஜ்** — வட இந்தியா, வார்தா ஸ்டேஷனிலிருந்து 100 மைல—பம்பாய் ராஜதானி சிவாலயம்.

**வான்மியூர்**—திருவான்மியூர் என வழங்கப்படுகிறது. அமிர்தபுரி என்று மற்றொரு பெயர் உண்டு. மயிலாப்பூருக் குத் தென்கிழக்கில் 3 மைல் தூரம். செங்கல்பட்டு ஜில்லா சென்னை ராஜதானி—வால்மீக முனி பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி மருதீஸ்வரர், அமிர்தீஸ்வரர்; தேவிசொக்கநாயகி, திரிபுரசுந்தரி; வன்னிமரம், இங்கு முற்காலத்தில் 5 தீர்த் தங்கள் இருந்தன. ஜன்மநாசனி, பாபநாசனி, காம நாசனி, ஞானதாயினி, மோட்சதாயினி. லிங்கம் பால் நிறமானது, சுயம்புமூர்த்தி—தியாகருடைய ஸ்தலங்களில் ஒன்று, ஆடும்தியாகர். தியாகர் நடனம் ஓர் மேடைமீது நடக்கிறது. பிரம்மோற்சவம் பங்குனி மாசம். திரிபுர

சுந்தரிகோயிலில் பல பழய கல்வெட்டுகள் உள. 1011-1043 வருடங்களில் ஆண்ட ராஜேந்திரன் இக்கோயிலுக்கு பன்முறை தரிசிக்க வந்துளன். கர்ப்பக்கிரஹம் ஆதி சோழக் கட்டடம், கஜப்பிருஷ்ட ஆகிருதி. பிரஞ்சு பூர்வீக ஆசிரியர் தூர்ப்ஹெஸில் துரையின்படி, இங்கு கர்ப்பக் கிரஹத்தில் பழய சோழக் கூடுகளின் சில்பங்கள் உள; மேல் பாகத்தில் சிங்க முகமும், நடுவில் மனிதமுகமு முடையவை. கர்ப்பக்கிரஹம் மேற்கு பார்த்தது. இக்கோயிலிலுள்ள பைரவருடைய விக்ரஹமும், அப்பைய தீட்சிதருடைய விக்ரஹமும், கவனிக்கத்தக்கவை. இங்கு 108 லிங்கங்கள் உள. ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்படாத கிழக்கு கோபுரம் உளது.

**வாளாடி மேலக்கோயில்** — வாளாடி புதுக்குடி என்றும் பெயர்—சென்னை ராஜதானி திருச்சிராப்பள்ளி ஜில்லா, சிவாலயம், ஸ்வாமி விஸ்வநாதர், தேவி விசாலாட்சி; வைப்பு ஸ்தலம்.

**வாணியம்பாடி** — சென்னை ராஜதானி, ஜோலார்ப் பேட்டைக்கு 9 மைல்—ரெயில்ஸ்டேஷன்—சிவாலயம்.

**வாலாஜாபேட்டை**—சென்னை ராஜதானி, ஆற்காடு ஜில்லா, ஆறுகாடுக்கு 10 மைல்—சிவாலயம்.

**விக்ரவாண்டி** — தென் இந்தியா ரெயில்ஸ்டேஷன் சென்னை ராஜதானி, சிவாலயம்; ஸ்டேஷனுக்கு 2 மைல் கிழக்கிலுள்ளது, ஸ்வாமி நேத்ரோதர்க்கர்; முக்கிய உற்சவங்கள் தை சித்திரை மாசங்களில்; இங்கு இரண்டு சத்திரங்கள் உண்டு.

**விசாகபட்டணம்**—கிழக்கு இந்தியா ரெயில் ஸ்டேஷன் சிவாலயம், ஸ்வாமி ஈஸ்வரர், தேவி பார்வதி, சிறிய கோயில்—புதியது. சிவராத்ரி உற்சவம்தான்.

**விசைநல்லூர்** — திருவிசைநல்லூர் என வழங்கப்படுகிறது, சென்னை ராஜதானி, சிவாலயம்; தர்மதீர்த்தம்; தூர்வாசர் பூசித்த க்ஷேத்திரம்.

**விட்டல்**—தென் கன்னட ஜில்லா, சென்னை ராஜதானி; பஞ்சலிங்கேஸ்வரர் கோயில்.

**விடைவாசல்** — திருவிடைவாசல் என வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி; பாபநாசம் தாலூகா, நீடாமங்கலம் ஸ்டேஷனுக்கு அருகிலுள்ளது, தஞ்சாவூர் ஜில்லா, 1918ஹு கோயிலில் திருஞானசம்பந்தருடைய தேவாரப்

பதிகம் ஒன்று நூதனமாகக் கல்வெட்டுகளில் கண்டுபிடிக்கப்பட்டது.

**விடைச்சுழி**—திருவிடைச்சுழி—நன்னிலம் தாலூகா, சென்னை ராஜதானி, தரங்கம்பாடிக்கு சமீபமுள்ளது சிவாலயம்; சேந்தனார் திருவிசைப்பா பெற்ற ஸ்தலம்.

**விடைவாய்க்குடி**,—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, ஆரூருக்கு 5 மைல்; கைலாயநாதர் உமாதேவி —வைப்புஸ்தலம்.

**விந்தியபர்வதம்** — மத்ய இந்தியா, சுயம்புலிங்கம்; ஸ்வாமி வராஹேஸ்வரர்.

**விப்பர்லா** — நரசராவ்பேட் தாலூகா, குண்டூர் ஜில்லா, சென்னைராஜதானி; சிவாலயம்; ஸ்வாமி, மல்லேஸ்வரன்; கோயில் சிலமாயிருக்கிறது.

**விமலேஸ்வரம்**—வடஇந்தியா, சுயம்புலிங்கம், ஸ்வாமி விஸ்வேசர்—ஸ்ரீகண்டர்.

**வியலூர்**-திருவிசலூர் பண்டாரவாடை எனவும் வழங்கப்படுகிறது. திருந்துதேவன்குடிக்கு 10 மைல் வடக்கு. கும்பகோணம் தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா, கும்பகோணத்திலிருந்து 4 மைல், சிவாலயம்; ஸ்வாமி யோகாநந்தேஸ்வரர் அல்லது ஏகாந்தநாதேஸ்வரர், தேவி சௌந்தரநாயகி, ஜிருதி தீர்த்தம், சடாயு தீர்த்தம். அரசனுக்கஞ்சி இறந்த அடியவரை உயிர்ப்பித்த ஸ்தலம், இவ்வூருக்குப் பழய பெயர் வேம்பத்தூர் அல்லது சோழமார்த்தாண்ட சதுர்வேதி மங்கலம். இக்கோயிலில் 1000 வருஷத்திற்கு முற்பட்ட கல்வெட்டுகள் உள. இங்கு 1013-ஆம் முதல் ராஜராஜன் துலாபாரம் நடத்தியதாக சொல்லப்படுகிறது. திருஞான சம்பந்தர் பாடல்பெற்றது. இங்கு அருகாமையில் கார்காத்தஈஸ்வரர் கோயில் என்று ஒரு சிவாலயமுளது.

**வியாக்ரேஸ்வரபுரம்**—கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி. ஒரு புலியானது லிங்கமாக மாற்றப்பட்டதென்பது ஐதிகம். புலி பூசித்த க்ஷேத்திரமாம்.

**வியாசர்பாடி**,—செங்கல்பட்டு ஜில்லா, சென்னபட்டணத்திற்கு வடக்கிலுள்ள கிராமம், சிவாலயம்; ஸ்வாமி இரவீஸ்வரர், தேவி மரகதாம்பாள்.

**விராலிமலை**—புதுக்கோட்டை சமஸ்தானம், சென்னை ராஜதானி, சிவாலயம், குகைக் கோயில்.

**விராஜா**—வட இந்தியா, சுயம்புலிங்கம்; ஸ்வாமி திரைலோசனர்.

விருஷஸ்தானம் — வடஇந்தியா சுயம்புலிங்கம்— ஸ்வாமி யமலிங்கேஸ்வரர்.

விரிஞ்சிபுரம்—சென்னை தெற்கு மராஷ்டிர ரெயில் ஸ்டேஷன்—திருவாஞ்சை, கௌரிபுரம், மரகத நகரம் எனவும் வழங்கப்படுகிறது. சிவாலயம் — ஸ்வாமி மார்க்க சகாயதேவர், தேவிமரகதவல்லி, சக்திதீர்த்தம்கார்த்திகை கடைஞாயிறு உற்சவம் விசேஷம். இதற்கு மகம்மேரு மகோற்சவம் என்று பெயர். தொண்டை நாட்டில் பாலி நதிக்கரையிலுள்ளது. பார்வதி தேவிக்கு ஒரு காரணத்தால் கருநிறம் வாய்க்க அதுநீங்க இங்கு அவர்கள் பரமசிவத்தை பூசித்த க்ஷேத்திரம்—வாணி பத்தின்மீதுசென்ற ஒருவனுக்கு வழித்துணையானபடியால் ஸ்வாமிக்கு மார்க்கசகாயர் எனப் பெயர் வந்தது. தம்மை பூஜைசெய்த ஆதிசைவப் பிராமண பிள்ளைக்குத் தன் திருமுடியை வளைத்தருளிய ஸ்தலம். நால்வர் பாடல் பெற்றது. பழய கோயில் ஸ்ரீ கிருஷ்ணதேவராயரால் புதுப்பிக்கப்பட்டது. சில்பங்கள் விசேஷ வேலைப்பாடுள் ளவை. கோயிலுக்குள் சிம்ஹ புஷ்கரிணி எனும் குளம் உளது கௌரிதேவி நிர்மாணம், இதில்தான் கடைஞாயிறு ஸ்நானம்; இதில் ஸ்நானம் செய்தால் பிசாசு பிடித்த வர்கள் சுவஸ்தமாவார்கள் என்று எண்ணப்படுகிறது. கோயிலில் ஆதி சங்கராசாரியார் சக்கரஸ்தாபனம் உளது. பிரம்ம தீர்த்தம், அஷ்டகோண வடிவமுடையது; பிரம னல் உண்டாக்கப்பட்டதென்பர். கோயில் அஷ்டதிக் மண்டபங்கள் அடங்கியது; பஞ்சப்பிராகாரங்களுடையது, நவஸ்தூபிகளுடையது, கர்ப்பக்கிரஹம் லிங்காகாரமானது ஸ்தூபி சிம்மாசனத்தோடு கூடியது. கர்ப்பக்கிரஹம் பழய சோழ கட்டடம், மஹா மண்டபம் மல்லிகும்பராயர் என்பவரால் கட்டப்பட்டது. விஜயநகரத்தரசர் காலத் தில் 100-க்கால் மண்டபம் வீரகும்பராயரால் கட்டப் பட்டது; கிழக்கு கோபுரம் விஜயநகரம் அச்சுதராயரால் கட்டப்பட்டது. இங்கு 50-கரு மேற்பட்ட மடங்களும், சத்திரங்களும் இருக்கின்றன. அவற்றுள் சப்பைய தீட்சிதர் மடமொன்றும்.

விருத்தாசலம்—முதுகுன்றம் என்பது இதன் தேவா ரப் பெயர், விருத்தகாசி என்றும் பெயர், தென் இந்தியா ரெயில்ஸ்டேஷன்; கூடலூருக்கு 35 மைல் தெற்கு, சிவால யம்; ஸ்டேஷனுக்கு 1 மைல்; ஸ்வாமி பழமலைநாதர், தேவி பெரியநாயகி; விருத்தாம்பாள், பாலாம்பாள் என்று

இரண்டு அம்மன்களுண்டு. மணிமுத்தாநதி, வன்னிவிருட்சம். பிரமன், அட்டவசுக்கள், உமை, விபசித்து, சிவனன்னள் பூசித்த ஸ்தலம். இங்கு இறக்கும் ஜீவகோடிகள் பார்வதியார் காப்பாற்ற, சிவபெருமான் பஞ்சாட்சர உபதேசம் செய்து தமது சாரூபமளிக்கும் ஸ்தலம் என்பது ஸ்தல புராணம். பிரம்மோற்சவம் மாசி மாதம். கோயில் உத்தம சோழனது தாயாரால் கட்டப்பட்டதென்பர். சிலர் விபாசித்என்ற மஹரிஷியால் கட்டப்பட்டதென்பர். 4 பெரிய கோபுரங்களை யுடையது; இரண்டு பெரிய பிராகாரங்கள் உள. இங்குள்ள வன்னிமரம் மிகவும் புனிதமானது. கோயிலில் ஒரு மண்டபம் மிகவும் அழகிய சில்ப வேலை யுடையது; காடவபல்லவ ராஜனல் கட்டப்பட்டது. விநாயகர் சந்நிதி மிகவும் கீழ்மட்டத்திலிருக்கிறது, பூமியிற் குகை நமசிவாயருக்காக அம்பிகை விருத்தையாகவும், பாலையாகவும் தோன்றியதாக ஐதிகம். இங்கு பல சத்திரங்கள் உள. முக்கியமானவை (1) துரைசாமி செட்டியார் சத்திரம், வடகுக் கோட்டைத் தெரு, 1 மைல், (2) பழனியப்ப செட்டியார் சத்திரம், (3) ரங்கசாமி பிள்ளை சத்திரம், (4) அப்பு ரெட்டியார் சத்திரம், தெற்கு கோட்டைத்தெரு, (5) செட்டியார் சத்திரம், அய்யனர் கோயில் தெரு. மூவர் பாடல் பெற்றது.

**விருதுநகர்**—ராம்நாட் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்—ஸ்வாமி சொக்கநாதர்.

**விருஷாசலம்** — (விருஷப + அசலம்) மலையாளத்திலுள்ளது; சென்னை ராஜதானி; குன்றின்மீது சிவாலயம்; இங்குள்ள நந்தி பெரியது, வெண்மைநிறமுடையது இதற்கு சிவபேரூர் என்றும் பெயர்.

**வில்லிபுத்தூர்**—திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி, தற்காலம் பிரபல விஷ்ணுஸ்தலம். இது பூர்வத்தில் சிவாலயமாயிருந்ததென்பதற்கு அத்தாட்சிகள் உள. இங்கு மூசாபர் பங்களா உண்டு.

**வில்லிவாக்கம்**—எம். எஸ். எம். ரெயில் ஸ்டேஷன்—கொண்ணூர் என்று சாதாரணமாக வழங்கப்படுகிறது. சிவாலயம்; ஸ்வாமி அகத்தீஸ்வரர் தேவி சொர்ணம்பிகை; பழய கோயில் புதுப்பிக்கப்பட்டது. கோயில் ஸ்டேஷனிலிருந்து சுமார் ½ மைல், இங்கு பல சத்திரங்கள் உள. கோயிலுக்கெதிரில் ஒரு குளம் உண்டு, பிரம்மோற்சவம் வைகாசி மாதம்.

வில்லியனூர் — சென்னை ராஜதானி; புதுச்சேரிக் கருகில் பிரெஞ்சு இலாகாவில் உள்ளது. சிவாலயம்—ஸ்வாமி திருக்காமேஸ்வரர், தேவி கோகிலாம்பாள். கல்வெட்டுகளில் இவ்வூர் வில்லியநல்லூர் என்றிருக்கிறது, ஸ்வாமி பெயர் காமீசுரமுடையார் என்றிருக்கிறது. விருஷபோற்சவம் பிரபலம்.

விழிச்சிலூர் — திருவிழிச்சலூர் என்றழைக்கப்படுகிறது, சென்னை ராஜதானி; சிவாலயம்—ஸ்வாமி ஆதிசண்டேஸ்வரர்.

விழுப்புரம் — தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்—ஸ்வாமி கைலாசநாதர். பிரம்மோற்சவம் சித்திரை மாதம். இங்கு சத்திரமுண்டு.

விளந்தை — உடையார்பாளையம் தாலூகா, திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்—ஸ்வாமி அகஸ்தீஸ்வரர், தேவி தர்மசம்வர்த்தனி.

விளநகர்—(திரு) தஞ்சாவூர் ஜில்லா சென்னை ராஜதானி, மாயவரத்திற்கு 4 மைல் கிழக்கு—சிவாலயம், ஸ்வாமி துறைகாட்டுவள்ளலார், தேவி வேயுறுதோளியம்மை அல்லது தோழியம்மை; காவிரிநதி, மெஞ்ஞான தீர்த்தம். சிவ பூசைக்காக புஷ்பம் கொண்டுவரும் வேதியனை காவிரி வெள்ளம் அடித்துக்கொண்டு போக, கூடையை விடாது சிவபெருமானை அவன் பிரார்த்திக்க, அவனுக்கு துறைகாட்டி காத்தருளியபடியால் ஸ்வாமிக்கு அப்பெயர் வந்தது. திருஞானசம்பந்தர் பாடல்பெற்றது. கோபுரம் 5 நிலையுடையது. தர்மபுரம் ஆதீனம் மேற்பார்வையிலடங்கியது.

வீளமர்—(திரு) சென்னை ராஜதானி தஞ்சாவூர் ஜில்லா, திருவாரூருக்கு 3 மைல் தென்மேற்கு; சிவாலயம் ஸ்வாமி பதஞ்சலி மனோஹரேஸ்வரர் தேவி யாழினுமென்மொழியம்மை, அக்னி தீர்த்தம், பதஞ்சலிமுனிவர் பூசித்த க்ஷேத்திரம்; பதஞ்சலி வியாக்ரபாதர்களுடைய விக்ரஹங்கள் கோயிலில் உண்டு. திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. விடங்க ஸ்தலங்களிலொன்று.

விளாப்பாக்கம்—வாலாஜாபேட்டை தாலூகா, வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி; நாகராதேஸ்வரர் கோயில்.

விற்குடி — (திரு) திருவிற்குடிவீரட்டம் என்பது தேவாரப் பெயர். தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன், வெட்டாறுக்கு 3½ மைல் வடகிழக்கிலுள்ளது. நந்நிலம்

தாலூகா தஞ்சாவூர் ஜில்லா சென்னை ராஜதானி, பரமசிவம் ஜலந்தரனை வென்ற ஸ்தலம். சந்திரசேகரர் ஆலயத்தில் சிவபிரான் கையில் சக்கரமுள்ளது. அஷ்டவீரட்டால க்ஷேத்திரங்களிலொன்று; ஸ்வாமி வீரட்டானேஸ்வரர், தேவி மையார்குழலியம்மை, ஏலவார்குழலி; சக்கர தீர்த்தம். திருஞானசம்பந்தர் பாடல்பெற்றது.

**விஷ்ணம்பேட்டை** — திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி; பூதலூருக்கு 6 மைல்; சிவாலயம்—கைலாசநாதர் காமாட்சியம்மன். வைப்புஸ்தலம்—இதற்கருகில் 2 சிவாலயங்களுண்டு.

**விஜயநகரம்** — சென்னை ராஜதானி சந்திரசேகரர் கோயில்—தற்காலம் பூஜையில்லை.

**விஜயமங்கை**—சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா, உடையார்பாளயம் தாலூகா, கொள்ளிடக் கரையில் கோவந்த பூத்தூரிலுள்ளது. திருப்புறம்பியத்திற்கு அருகிலுள்ளது. அர்ஜுனன் சிவபெருமானைப் பூசித்து பாசுபதாஸ்திரம் பெற்ற ஸ்தலமென்பது ஐதிகம். கும்பகோணத்திலிருந்து 8 மைல்; ஸ்வாமி விஜயநாதேஸ்வரர் (விஜயன் = அர்ஜுனன்) தேவி மங்கைநாயகி, அர்ஜுன தீர்த்தம்; சிறிய கோயில்; கோயிலுக்கு மஹாவனீச்சரம் என்று பெயர். திருஞானசம்பந்தர், அப்பர் பாடல்பெற்றது.

**விஸ்வேசம்**—வட இந்தியா சிவாலயம்-சுயம்புலிங்கம், ஸ்வாமி விருஷபதுங்கர்.

**விளத்தொட்டி** — சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, தேவார வைப்புஸ்தலம், வைதீஸ்வரன் கோயிலிலிருந்து திருப்பந்தணை நல்லூருக்குப் போகிற வழியில் 12 மைல் தூரத்தில் உள்ளது—சிவாலயம், ஸ்வாமி பிரமபுரீசர், தேவி இட்சுரசநாயகி, பிரமதீர்த்தம்; இந்திரன் முதலிய திக்பாலர்களும், பிரமனும் பூசித்த ஸ்தலம். இத்தலத்தில் பூசித்தால் பைத்தியம் நிவாரணமாகுமென்பது ஐதிகம்.

**விஜயமாநகரம்** — சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, திருச்செந்தூருக்கு $11\frac{1}{2}$ மைல் சிவாலயம் மனோன்மணீசர், சிவகாமி; பிர்மா, விஷ்ணு, அர்ஜுனன் பூசித்தது.

**வீரச்சாலை**—புதுக்கோட்டைச் சமஸ்தானம் சென்னை ராஜதானி, திருமய்யம் தாலூகா, பெரிய சிவாலயம்.

**வீரசிகாமணி**—சென்னை ராஜதானி, குகைக்கோயில்—குகைக்குள் லிங்கம் உளது.

**வீரபத்ரபுரம்**—கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி; சிவாலயம், தேவுடுபிஞ்சரி எனும் குன்றின்மீதுள்ளது. ஸ்வாமி வீரபத்ரர்—சிவராத்ரி விசேஷம்.

**வீரபாண்டி**—மதுரை ஜில்லா சென்னை ராஜதானி, சிவாலயம்; கண்ணேஸ்வர உடையார் வீரபாண்டியனல் கட்டப்பட்டது. குருடான வீரபாண்டியனுக்கு பரமசிவம் ஒரு கண் கொடுத்தார் என்பது ஐதிகம்.

**வீரமாங்குடி** — சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சக்கரப்பள்ளிக்கு அருகிலுள்ளது, சிவாலயம்—கைலாயநாதர் ஆநந்தவல்லி.

**வீரவநல்லூர்**—வடக்கு அம்பா சமுத்திரம் தாலூகா, திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்—பூமிநாதஸ்வாமி தேவி மரகதாம்பாள். தைப்பூச உற்சவம்—விசேஷம். கோயில் வீரை அறன் எனும் பாண்டியனல் கட்டப்பட்ட தென்பர்.

**வீழிமிழலை** — சென்னை ராஜதானி, குற்றாலத்திலிருந்து 6 மைல்; மஹாவிஷ்ணு தன் கண்ணைப்பறித்து தாமரையாக சிவபெருமானைப் பூசித்து சக்கரம் பெற்ற க்ஷேத்திரம்—விண்ணிழிவிமானர் கோயில்; ஸ்வாமி வீழி அழகேஸ்வரர் தேவி சுந்தரகுசாம்பிகை அல்லது சுந்தராம்பிகை; விஷ்ணு தீர்த்தம் அல்லது சக்கர தீர்த்தம்; வீழி விருட்சம், திரு+வீழி+மிழலை=திருவீழிமிழலையாயிருக்கலாம்; அப்பருக்கும் திருஞானசம்பந்தருக்கும் பஞ்சகாலத்தில் பொன் கொடுத்தருளிய ஸ்தலம்; அப்பொன் வைக்கப்பட்ட கல் ஸ்தம்பம் இன்றும் காட்டப்படுகிறது. ஸ்வாமி மணக் கோலத்துடன் எழுந்தருளியிருக்கிறார். சீர்காழியிலிருந்த கோலத்தை திருஞானசம்பந்தருக்கு இங்கு விமானத்தில் காட்டியருளியஸ்தலம். இக்கோயிலின் வௌவால் நெற்றிமண்டபம் அழகியது. இதன் வடக்கு வீதியில் திருஞானசம்பந்தருடைய ஆலயமும் அப்பருடைய ஆலயமும் உளது; மூவர் பாடல் பெற்றது. சேந்தனர் திருவிசைப்பா பெற்றது. அடியார்கள் திருவமுது கொண்ட இடத்திற்கு ஆண்டார் பந்தி யென்றும், அவர்களுக்கு சமயல் செய்த இடத்திற்கு பாகசாலை என்றும் பெயர் உளது; பாகசாலையைத் தற்காலம் பாசாலை என்று அழைக்கின்றனர்.

வெங்கடகிரி—சென்னை ராஜதானி, ரெயில் ஸ்டேஷன்; சிவாலயம் சிறியது; பிரம்மோற்சவம் ஆனி மாதம் ஸ்வாமி காளத்தீசர், தேவி ஞானம்பிகை.

வெங்கனூர்—திருவெங்கை என்றழைக்கப்படுகிறது. திருச்சிராப்பள்ளி ஜில்லா, பெரும்பாளுருக்கு 12 மைல்; சென்னை ராஜதானி, அழகிய சிவாலயம்—கர்ப்பக்கிரஹம் ஆவுடையாரைப்போன்றது; சுமார் 1622௵ அண்ணமலை ரெட்டியாரால் கட்டப்பட்டது, லிங்கம் நர்மதை நதியிலிருந்து கொண்டுவரப்பட்டது. ஸ்வாமி விருத்தாசலேஸ்வரர், தேவி பெரியநாயகி.

வெஞ்சமாக்கூடல் — (திரு) சென்னை ராஜதானி, கரூர் ஸ்டேஷனுக்கு 12 மைல் தெற்கு, வெஞ்சன் எனும் அரசனது தலை நகராயிருந்து அவன் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி விகிர்தநாதேஸ்வரர், தேவி விகிர்தநாயகி, விகிர்த தீர்த்தம்; கொங்கு தேசத்திலுள்ள 7 முக்கிய சிவாலயங்களில் இது ஒன்றாகும். சுந்தரர் பாடல் பெற்றது.

வெண்காடு—(திரு) சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சம்ஸ்கிருதத்தில் ஸ்வேதாரண்யம் எனப்படும். சீர்காழிக்கு 7½ மைல் தென்கிழக்கு—தேவேந்திரனும், வெள்ளையானையும் பூசித்த க்ஷேத்திரம்; இங்கு சோமசூர்ய அக்னி எனும் முக்குளங்களுண்டு. இம்முக்குளங்களிலும் ஸ்நானம் செய்பவர் சகல பாபங்களினின்றும் நீங்கி எண்ணிய கர்மம் பூர்த்திபெறுவார் என்று திருஞான சம்பந்த ஸ்வாமி பாடியுள்ளார். ஸ்வாமி ஸ்வேதாரண்ய ஈஸ்வரர், தேவி பிரம்மவித்யாநாயகி. மேற்சொன்ன மூன்று தீர்த்தங்களன்றி, காயத்ரிதீர்த்தம் மணிகர்ணிகை எனும் தீர்த்தங்களும் உள. வடவால விருட்சம்; கோயிலில் பல கல்வெட்டுகள் உள; அவற்றுளொன்றில் ஆடவல்லார் விக்ரஹமும், விருஷபவாகனதேவர் விக்ரஹமும் இக்கோயிலிலிருப்பதாக குறிப்பிட்டிருக்கிறது. மற்றொன்றில் ஸ்வாமியின் பெயர் திருவெண்காட்டுப் பெருமாள் என்றிருக்கிறது. கோயிலிலுள்ள வெண்கல பிட்சாடனமூர்த்தி விக்ரஹம் மிகச் சிறந்தது. இக்கோயிலில் நவக்கிரகங்கள் வக்கிரமாயில்லாது வரிசையாக வைக்கப்பட்டிருக்கின்றன. கோயில் 799 x 310 விஸ்தீர்ணம். மெய்கண்டதேவர் பிறந்த ஊர். மருத்துவாசுரன் என்பவன் நந்திதேவரால் தோற்கடிக்கப்பட, ஈஸ்வரனைக் குறித்துப் பிரார்த்தித்து அவரது சூலத்தைப் பெற்று மறுபடியும் யுத்தத்திற்குச் சென்று, நந்தியின் வால் முதலிய

வைகளை வெட்ட, பிறகு பரமசிவம் அகோரமூர்த்தியை சிருஷ்டித் தனுப்ப, அவர் அந்த அசுரனை இங்கு கொன்றார் என்பது ஸ்தல புராணம். ஸ்வாமிக்கு எதிரிலுள்ள நந்தி மேற்சொன்னபடி பின்னப்பட்டிருக்கிறது; அகோர மூர்த்தி விசேஷம்; இங்குள்ள பிள்ளையாருக்கு பெரியவாரணப் பிள்ளையார் என்றும், விலங்கு தரித்த பிள்ளையார் என்றும் பெயர். மூவர் பாடல்பெற்ற க்ஷேத்திரம். இங்கு மணிகர்ணிகைக்கு வடப்பக்கம் யோகீஸ்வரம் எனும் சிவாலயமுளது. இங்கு மாதங்கியாகப் பிறந்த பார்வதியை பரமசிவம் மணந்ததாக ஐதிகம். பிரம்மோற்சவம் மாசி மாதம்.

**வெண்குடி** — சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, சிவாலயம்; திருநெல்வேலிக்கு 25 மைல்; ஸ்வாமி சொக்கேசர், தேவி சிவகாமி, சிபி சக்ரவர்த்தி பூசித்த ஸ்தலம்.

**வெண்குன்றம்**—வந்தவாசி தாலூகா, வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி—தவளகிரீஸ்வரர் கோயில் மலைமீதுள்ளது.

**வெண்ணெய் நல்லூர்**—திருக்கோயிலூர் தாலூகா, தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம்; கல்வெட்டுகளில் திருவெண்மை நல்லூர் என்று பெயர் இருக்கிறது. மாம்பழபட்டு ஸ்டேஷனுக்கு 6 மைல் தெற்கு, ஸ்வாமி தடுத்தாட்கொண்ட ஈஸ்வரர், ரிஷபவாகனரூடராயிருக்கிறார், தேவி வேற்கண்ணியம்மை; பெண்ணைநதி. கல்வெட்டுகளில் ஸ்வாமிபெயர் அருட்டுறையாள்வார், ஆட்கொண்டதேவர் என்றிருக்கிறது. ஆலயத்திற்கு திரு அருட்டுறை என்று பெயர்; (கிருபாபுரீஸ்வரர் கோயில் சம்ஸ்கிருதம்) சிவபெருமான் சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட திவ்ய க்ஷேத்திரம். சம்புபூத்தரிஷி பூசித்த ஸ்தலம், மெய்கண்டதேவர் பூசித்த ஸ்தலம். இக்கோயிலில் வழக்கு மன்றம் என்று ஒரு மண்டபம் இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

**மணம்தவிர்த்த புத்தூர்**—பண்ணுருட்டிக்கு 4 மைல் தூரத்திலிருக்கிறது; இதுவன்றி தடுத்தாட்கொண்டவூர் எனும் கிராமம் இதற்கு 1½ மைலிலிருக்கிறது. சுந்தரர் பாடல் பெற்றது; கோயிலில் ஸ்வாமி ரிஷபவாஹனரூடராய்க் காட்சியளிக்கின்றார்.

**வெண்ணெய்மலை**—சென்னை ராஜதானி, கருருக்கு அருகிலுள்ளது. கோயமுத்தூர் ஜில்லா, ஸ்வாமி விஸ்வ

நாதர்; தேவி விசாலாட்சி, கோயில் காசிவாசி என்பவரால் புதிதாய்க் கட்டப்பட்டது. சிவலிங்கம் சிவந்த நிறமுடையது.

**வெண்துறை** — (திரு) வெண்துறை—சென்னை ராஜதானி, தஞ்சாவூர்ஜில்லா, திருவண்டுதுறை யெனவும் வழங்கப்படுகிறது. மன்னார்குடி ஸ்டேஷனுக்கு 13 மைல் கிழக்கு; பிருங்கி மஹாரிஷி பூசித்த க்ஷேத்திரம்; ஸ்வாமி வெண்டுறைநாதேஸ்வரர்; தேவி வேல்நெடுங்கண்ணியம்மை. அகஸ்திய தீர்த்தம்; வித்யாதரர் பூசித்த ஸ்தலம் என்பது ஸ்தல புராணம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

**வெண்பாக்கம்**—திருவிளம்பூர், திருவுளம்பூதூர், எனவும் வழங்கப்படுகிறது. திருவள்ளூருக்கு 6 மைல் வடக்கிலுள்ளது. சென்னை ராஜதானி, சுந்தரர் சங்கிலிநாய்ச்சியாருக்குக் கொடுத்த வாக்கு தவறியபடியால் கண்களிழந்து, இங்கு வந்தபிறகு ஊன்றுகோல் பெற்ற ஸ்தலம். சுந்தரர் தன் பதிகத்தில் "உளோம் போகிர் என்றானே" என்று பாடிய க்ஷேத்திரம், எனவே திருவுளம்பூதூர் எனப்பெயர் பெற்றது. ஸ்வாமி வெண்பாக்கநாதர், தேவி கனிவாய் மொழியம்மை; கைலாய தீர்த்தம், இதற்கு 1½ மைல் தூரத்தில் மற்றொரு சிவாலய முளது. ஸ்வாமி கைகாட்டியநாதர் (முத்துலிங்கேஸ்வரர்?) தேவி பரமேஸ்வரி.

**வெள்ளக் கோயில்** — கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, தாராபுரம் தாலூகா — பழய சிவாலயம், பல கல்வெட்டுகள் உடையது.

**வெள்ளவாயல்**—செங்கல்பட்டுஜில்லா, பொன்னேரி தாலூகா, சென்னை ராஜதானி, திருவள்ளீஸ்வர ஸ்வாமி கோயில்.

**வெள்ளறை** — திருவெள்ளறை என வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா—மேற்படியூருக்கு 1மைல் தூரம்; ஜம்புநாதஸ்வாமி கோயில்; அன்றியும் குடைவரைக் கோயில் ஒன்றுளது. மிகவும் பழமையானது, சிறு கர்ப்பக்கிரஹமும், முன் மண்டபமும் அடங்கியது; இந்த முக மண்டபத்தில் நான்கு மாடங்களிருக்கின்றன. இவற்றுள் வலது புறமாடத்தில் மஹா விஷ்ணுவின் உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. இது பல்லவர்கள் காலத்தில் நரசிம்மவர்மன் அல்லது நந்திவர்மனால் வெட்டப்பட்டதென்று எண்ண இட முண்டு; காலம் 625-505—க்கைக் கோயில் பூர்த்தியாகவில்லை—இங்குள்ள அம்மன் கோயிலுக்கு முன் உள்ள மேடையின் அடி

பாகத்தில் சில முக்கியமான கல் வெட்டுகள் உள. அவைகளில் திருவானைக்கா பெருமான் அடிகள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் இங்குள்ள நாலுமூலைக் கேணியில் பரமசிவம், பார்வதி தேவி, பரிவார தேவதைகள், சப்தமாதருக்கள் முதலிய சிலைகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இங்கு கிணறு பல்லவ அரசனை தந்திவர்மனால் குடையப்பட்டது; கல்வெட்டுகளில் "மாரப்பிடுகு பெருங்கிணறு" என்றிருக்கிறது. இது 7-ஆம் நூற்றாண்டியதென எண்ணப்படுகிறது.

**வெள்ளனூர்** — புதுக்கோட்டை சமஸ்தானம், கல்வெட்டுகளில் இவ்வூரின் பெயர் வெள்ளநல்லூர் என்றிருக்கிறது. இங்கு 2 சிவாலயங்கள் உண்டு. ஒன்றில் மாத்திரம் தற்காலம் பூஜை நடக்கிறது. இரண்டும் பழய சோழ கட்டடங்கள்.

**வெள்ளிவாக்கம்**—சென்னை ராஜதானி, சிவாலயம், ஸ்வாமி கார்த்தமார்க்கேஸ்வரர், தேவி பார்வதி, தீர்த்தம் புண்டரீக புஷ்கரிணி.

**வெள்ளிதுலங்கர தேசம்** — கொச்சி ராஜ்யம், சிவாலயம்.

**வெள்ளியங்கிரி**—கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்—ஸ்வாமி பஞ்சபூதலிங்கேஸ்வரர், தேவி பார்வதி; பார்வதி பூசித்த க்ஷேத்திரம்.

**வெள்ளாந்துக்கோட்டை** — திருவள்ளூர் தாலூகா, வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி-சோமேஸ்வரர் கோயில்.

**வெண்டையம்பட்டி**—சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா, சிவாலயம்.

**வெள்ளப் பெரம்பூர்**—சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா, திருக்காட்டுப்பள்ளிக்கு 6 மைல், சிவாலயம்—ஸ்வாமி ஏகாம்பரநாதர், தேவி காமாட்சி அம்மன்.

**வெற்றியூர்** — (ஜெயபுரி) சென்னை ராஜதானி, திருவாடானைக்கு 8 மைல், வைப்புஸ்தலம்; உடையார்பாளயம் தாலூகா, திருச்சிராப்பள்ளி ஜில்லா.

**வேங்கடத்துறையூர்** — திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, வாலாடிக்கு 2 மைல்—சிவாலயம்.

**வேங்கைவாயில்** — புதுக்கோட்டை சமஸ்தானம், சென்னை ராஜதானி, புதுக்கோட்டைக்கு 3 மைல், சிவாலயம் இங்குள்ள தட்சிணாமூர்த்தி அழகியது.

**வேட்களம்**—திருவேட்களம்; சென்னை ராஜதானி, சிதம்பரத்திற்கு $1\frac{1}{2}$ மைல் கிழக்கு, அர்ஜுனன் சிவபெருமானிடமிருந்து பாசுபதாஸ்திரம் பெற்ற ஸ்தலம். சிறிய கோயில்; அண்ணாமலை நகரில் உள்ளது. பழய கோயில் 1912ஆம் முற்றிலும் ராஜா அண்ணாமலை செட்டியார் அவர்களால் புதுப்பிக்கப்பட்டது. ஸ்வாமி பாசுபதேஸ்வரர், தேவி நல்லநாயகியார் அல்லது சற்குணாம்பிகை. நாரத தீர்த்தம்; மூங்கில் வனம். சில வருடங்களுக்குமுன் கிராடமூர்த்தி, வேடச்சி அம்மன், அர்ஜுனன் சிலைகள் பூமியிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டு கோயிலில் வைக்கப்பட்டிருக்கின்றன; அழகியவை. கோயில் எப்பொழுதும் சுத்தமாய் வைக்கப்பட்டிருக்கிறது.

**வேட்டக்குடி**—(திரு) சென்னை ராஜதானி, பொறையார் ஸ்டேஷனுக்கு 4 மைல் கிழக்கு, அர்ஜுனனுக்கு சிவபெருமான் வேடுவ உருவில் தோன்றிய இடம், சிவாலயம். ஸ்வாமி திருமேனி அழகேஸ்வரர், தேவி சுகந்தவன நாயகி; சந்திரபுஷ்கரிணி. திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

**வேட்டைமங்கலம்** — கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, கரூர் தாலூகா—பழய சிவாலயம்.

**வேட்டைமங்கலம்** — திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, பழய சிவாலயம், சேர அரசன் ஒருவனால் கட்டப்பட்டதென்பர்.

**வேடன்கோலம்**—திருவேடன்கோலம் என அழைக்கப்படுகிறது. திருச்சிராப்பள்ளி தாலூகா, மேற்படி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

**வேதாரண்யம்**—இதற்கு ஆதிசேது என்றும் பெயர் உண்டு. தென் இந்தியா ரெயில்ஸ்டேஷன்; சென்னை ராஜதானி. வேதங்கள், முசுகுந்த சக்ரவர்த்தி, ஸ்ரீராமர் பூசித்த க்ஷேத்திரம்; சப்தவிடங்க ஸ்தலங்களில் ஒன்று. வேதங்கள் பூசித்து திருக்காப்பு செய்த கதவை, திருநாவுக்கரசும், திருஞானசம்பந்தரும், திறக்கவும் மூடவும் பாடியருளிய ஸ்தலம். சேரமான்பெருமானும், சுந்தரமூர்த்தியும் சேர்ந்து ஸ்வாமியை தரிசித்த ஸ்தலம். கோயில் தீபத்தை அகஸ்மாத்தாய் தூண்டிய எலிக்கு, சிவபெருமான் சக்ரவர்த்தி பட்டம் அருளிய ஸ்தலம். ஸ்வாமி வேதாரண்யேஸ்வரர், மறைக்காட்டீஸ்வரர், தேவி யாழைப் பழித்தமொழியம்மை; கோடிதீர்த்தம், வேததீர்த்தம், மணிகர்ணிகை குளம்; வன்னி விருட்சம். தியாகர்—புவனிவிடங்கர், பிரம்

மோற்சவம் ஆனிமாதம்; அகஸ்தியருக்கு சிவபெருமான் மணக்கோல தர்சனம் பிரபல உற்சவம். இவ்வூர் மிகவும் பழமையானது; டாலமி என்பவரால் நிகமா என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சம்ஸ்கிருதப் பெயர் நிகமவனம். வேதாரண்யத்திற்கு 7 மைல் தூரத்தில் நாலுவேதப்பதியுள்ளது. இங்கு கோயிலின் மேற்கு புறத்திலுள்ள விநயகர், ஸ்ரீராமரைப் பிடித்த பிரம்மஹத்தியை நீக்கினவர்; வீரஹத்தி விநயகர் என்று பெயர். ஸ்ரீராமர் பிரதிஷ்டை செய்த லிங்கம் இங்குள்ளது ஸ்ரீராமர் தங்கிய இடம் அகரம் அல்லது ராமசந்திரபுரம் என்றழைக்கப்படுகிறது. கர்ப்பக்கிரஹத்தின் பின்புறம் ஸ்வாமியின் மணக்கோலக் காட்சி செதுக்கப்பட்டிருக்கிறது. கோடிக்கரை தீர்த்தம், சமுத்திரக்கரையிலுள்ளது. திருவிளையாடற் புராணம் எழுதிய பரஞ்சோதிமுனிவர் பிறந்த இடம். 905—947ல் ஆண்ட ஓர் அரசன் காலத்திய கல்வெட்டொன்று கோயிலில் உளது. திருக்கருபூண்டி ஸ்டேஷனுக்கு 22 மைல், இங்கு சத்திரமுண்டு. நடராஜாசபைக்கு வேதசபை என்று பெயர்.

**வேதிக்குடி**—(திரு) தஞ்சாவூர் ஜில்லா, கண்டியூருக்கு 1 மைல் கிழக்கு; சென்னை ராஜதானி, வேதங்கள், குபேரன், சைதன்ய மகரிஷி பூசித்த ஸ்தலம்; தஞ்சாவூருக்கு 7 மைல், சப்தஸ்தான க்ஷேத்திரங்களில் 6-வது, ஸ்வாமி வேதபுரீஸ்வரர், தேவி மங்கையர்க்கரசி, சுந்தர தீர்த்தம். திருஞானசம்பந்தர், அப்பர் பாடல்பெற்றது.

**வேம்பத்தூர்** — கும்பகோணம் தாலூகா, கும்பகோணத்திற்கு 5 மைல், மருதீசர், பாலாம்பாள்; கவங்கி தீர்த்தம்.

**வேப்பம்பட்டு** — வேலூர் தாலூகா, வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்; ஸ்வாமி விருபாட்சீஸ்வரர்.

**வேப்பூர்** — குடியாத்தம் தாலூகா, வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, வசிஷ்டேஸ்வரர் கோயில்; கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் வசிஷ்டநாயனர் என்றிருக்கிறது. தேவி பாலகுசாம்பாள். வசிஷ்டர் பூசித்த க்ஷேத்திரம்.

**வேம்பள்ளி**—சென்னை ராஜதானி, கடப்பை ஜில்லா சிவாலயம், நந்தி பூசித்த ஸ்தலம்.

**வேளூர்**—நெல்லூர் ஜில்லா, சென்னை ராஜதானி மல்லேஷ்வர் கோயில்.

**வேலூர்**—ராயவேலூர் என வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, ரயில்ஸ்டேஷன், சிவாலயம், 1350ல் கட்டப்பட்டது. இக்கோயிலில் தற்காலம் பூஜையில்லை. இங்குள்ள கலியாண மண்டபம் மிகவும் அழகியது; விஜயநகரச் சில்பம்; யாளிகளும் குதிரைகளுமுடைய ஸ்தம்பங்கள் அழகிய சில்ப வேலை அமைந்தவை. இதன் கூரையில் 3 வரிசை கிளிகள் தங்கள் மூக்குகளிலும் கால்களிலும் தாமரையின் இதழ்களை தாங்கியிருப்பது போல அருமையான சில்பமுடையது. கோயில் கோட்டைக்குள் இருக்கிறது. மகம்மதியர் இங்கு ஆண்ட காலத்தில், கோயிலுக்குள் ஒரு கொலை நடந்தபடியால் அன்று முதல் பூசை நிறுத்தப்பட்டது; உற்சவமூர்த்திகள் முதலியன வெல்லாம் அன்றிரவே ரகசியமாக அகற்றப்பட்டன; பிராகாரத்திலுள்ள ஒரு கிணற்றின் கீழ் ஒரு சுரங்கம் போகிறது; அங்கு மறைக்கப்பட்டிருக்கலாம் என்று எண்ணுகிறார்கள். இங்கு ஒரு மண்டபத்தின் கீழ், பூமி மட்டத்தின் கீழ் இன்னொரு மண்டபம் இருப்பதை சில வருடங்களுக்கு முன் அகஸ்மாத்தாய்க் கண்டு பிடித்தனர்; தற்காலம் இது மூடப்பட்டிருக்கிறது. கோபுரம் கட்டியதில் ஏதோ குற்றமிருப்பதாயும் அதனால் கோயில் விளக்கு எரியாது (பூசை நடவாது) என்று அதைக்கட்டிய சில்பியின் மகள் கூறியதாகச் சொல்லப்படுகிறது. கோயிலும் கோட்டையும் ஒரு விஜயநகர நாயக்கருடைய தளகர்த்தன் பிள்ளைகளாகிய பொம்மி ரெட்டி திம்மா ரெட்டி என்பவர்களால் கட்டப்பட்டதென்பர். பிற்காலத்தில் தென் இந்தியா யுத்தங்களில் பல வருடங்கள் கோயிலானது ஆயுத சாலையாக உபயோகிக்கப்பட்டது. கோயிலின் ஸ்வாமி பெயர் ஜலகண்டேஸ்வரர் என்று கூறுகிறார்கள் (?) இவ்வூரில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் என்று புதிய சிவாலயமொன்றுண்டு. ஆடிமாதம் விசேஷ உற்சவம். இங்கு முசாபர் பங்களா உண்டு; சத்திரங்களுமுண்டு.

**வேள்விக்குடி**—(திரு) தென் இந்தியா ரெயில் குற்றாலம் ஸ்டேஷனுக்கு 3 மைல் வடகிழக்கு; தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி. ஸ்வாமி கலியாணசுந்தரேஸ்வரர், தேவி பரிமளசுகந்த நாயகி; மங்கள தீர்த்தம்; ஒரு அரச குமாரனுக்கு, அவனுக்கு நிச்சயிக்கப்பட்டிருந்த பெண்ணை பூதத்தால் கொண்டு வரச் செய்து, ஸ்வாமி கலியாண வேள்வி முடித்தருளிய ஸ்தலம். திருஞானசம்பந்தர் சுந்தரர் பாடல்பெற்றது.

**வேற்காடு**—திருவேற்காடு — சென்னை ராஜதானி, செங்கல்பட்டு ஜில்லா, ஆவடி ஸ்டேஷனுக்கு 4 மைல் தென் கிழக்கு, ஆவடி ஸ்டேஷனிலிருந்து பூவிருந்தவல்லிக்குப் போகும் பாதையில் இரண்டாவது மைலிலுள்ள கரியாஞ் சாவடிக்கு வடக்கிலுள்ளது. மூர்க்க நாயனர் அவதார க்ஷேத்திரம்; பிரமனை சிறையிட்டசாபம்தீர சுப்பிரமணியர் சிவபெருமானைப் பூசித்த ஸ்தலம். எக்காலமும் வற்றாத வேலாயுத தீர்த்தமுடையது. கூவ நதிக்கரையிலுள்ளது; இதைப்பாலிநதிஎன்றும் அழைப்பர். ஸ்வாமி வேற்காட்டீ ஸ்வரர் அல்லது வேதபுரீஸ்வரர், தேவிபாலாம்பிகை அல்லது வேற்கண்ணியம்மை; பிரம்மோற்சவம் சித்திரை மாதம். இங்கு சித்திராபௌர்ணமிதினம் சந்திப்பு திருஊறல் உற்ச வம் விசேஷம். இங்குள்ள விஜயகரிடமிருந்து மகாவிஷ்ணு விகடக்கூத்தாடி பாஞ்சஜன்யம் பெற்றனர் என்பது ஐதிகம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

**வேளச்சேரி**—செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜ தானி, தண்டீஸ்வரர் சிவாலயம்.

**வேனூர்**—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, திருத்துறைப்பூண்டிக்கு 3 மைல், சிவாலயம் வைப்புஸ்தலம்.

**வேங்கனூர்**—சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா, சிவாலயம்; ஸ்வாமி விருத்தாசலேஸ்வரர், தேவி பிரஹந்நாயகி; வைப்புஸ்தலம்.

**வைக்கம்** — திருவாங்கூர் ராஜ்யம்—ஆலப்புழைக்கு 23 மைல். இந்த ராஜ்யத்திலுள்ள சிவஸ்தலங்களில் இது பெயர் பெற்றது, சிவாலயம்—வியாக்ராலயம் என்பது மருவி வைக்கம் என்றாயது என்பர். வியாக்ரபாதர் பூசித்த க்ஷேத்திரம்; ஸ்வாமி மஹாதேவர், பெருந்துறை கோயில், அப்பர், தேவி பார்வதி—மாசி கார்த்திகை மாதங்களில் முக்கிய உற்சவங்கள்; கார்த்திகை அஷ்டமி உற்சவம் விசேஷம். இதுதான் மாணிக்கவாசகருடைய திருப் பெருந்துறை யென்பர் சிலர்.

**வைகல்**—வைகன் மாடக்கோயில் என்பது தேவாரப் பெயர்—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி; ஆடு துறைக்கு $4\frac{1}{2}$ மைல் தெற்கு, கோச்செங்கணன் எனும் சோழன் அருள் பெற்ற ஸ்தலம். வைகல் எனுமிடத்தில் ஒரு கோயிலும், **மாடக் கோயில்** எனுமிடத்தில் ஒரு கோயிலும் உளது, இரண்டையும் சேர்த்து திருஞான சம்பந்தர் பாடியுளார். கோயில் கோச்செங்கண்ணன்

கட்டிய மாடக் கோயில்களில் ஒன்று; ஸ்வாமி—வைகல் நாதேஸ்வரர், தேவி வைகலாம்பிகை. மாடக்கோயில்—ஸ்வாமி சோமேஸ்வரர், தேவி இளங்கோதையம்மை, கொம்பிவிளங்கோதை—சூரிய தீர்த்தம்.

**வைகாவூர்**—(திரு) சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, இதற்கு வில்வவனம் என்றும் பெயர் உண்டு. கும்பகோணத்திற்கு 9 மைல், விஜயமங்கைக்கு 1 மைல் மேற்கு, சிவாலயம்—ஸ்வாமி வில்வனேஸ்வரர், வில்வவன நாதர், தேவி வளைக்கைநாயகி அல்லது பூவல்லியார், பவளக்கைநாயகியார்; யம தீர்த்தம்; வில்வ விருட்சம், திருஞானசம்பந்தர் பாடல்பெற்றது. க்ஷேத்திரம் சிவ ராத்ரி மஹாத்மிய சம்பந்தமானது.

**வைதரணிரோட்**—வட இந்தியா ரெயில் ஸ்டேஷன்; கூர்டா ஸ்டேஷனிலிருந்து 82 மைல்; சிவாலயம்-வைதரணி நதி. இதில் ஸ்நானம் செய்பவர்களுக்கு வைதரணிநதியைக் கடக்கவேண்டிய கஷ்டமில்லையாம்.

**வைத்யநாத்பூர்**—மைசூர் ராஜ்யம், மத்தூர் ரெயில் ஸ்டேஷனுக்கு 3 மைல், சிவாலயம்; ஸ்வாமி வைத்யநாதேஸ்வரர், தேவி பார்வதி.

**வைதீஸ்வரன் கோயில்**—இதன் தேவாரப் பெயர் புள்ளிருக்கும் வேளூர், தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, ரெயில்வே ஸ்டேஷன். சம்பாதி, ஜடாயு, ரிக்வேதம், முருகவேள், சூரியன் பூசித்த ஸ்தலம். (இங்கிருக்கும் சுப்பிரமணியருக்குமுத்துகுமாரஸ்வாமி என்று திருநாமம், மிகவும் பிரபலமானது; கிர்த்திகை விசேஷம்) கோயில் மேற்கு பார்த்தது, ஸ்வாமி வைத்யநாதேஸ்வரர், தேவி தையல்நாயகி, சித்தாமிர்த தீர்த்தம்; வேம்பு விருட்சம். சுப்பிரமணியருடைய சைனியங்கள் சூரபத்மனால் காயப் படுத்தப்பட்டபோது, அவைகளுக்கு சிகிச்சை செய்தபடியால் வைதீஸ்வரர் எனப் பெயர் வந்ததென்பது ஐதிகம். புள்=பட்சி (ஜடாயு) ரிக்=ரிக்வேதம், வேள்=சுப்பிரமணியர்; புள்ளிருக்கும்வேளூர் என்றாயது. இக்கோயிலின் ஒரு புறம் ஸ்ரீராமர் ஜடாயுவைத் தகனம்செய்த இடம் காட்டப் படுகிறது; அச்சாம்பல் இன்னும் அங்கிருப்பதாக ஐதிகம். கோயிலில் ஜடாயுவும் சம்பாதியும் பரம்சிவத்தை வழிபட்ட படி சிலைகள் இருக்கின்றன. இக்கோயிலில் வெண்கலத் தாலாகிய கங்காவிசர்ஜன மூர்த்தி பார்க்கத்தக்கது. இருபத்தைந்து முகங்களும் 50 கரங்களுமுடைய மஹாசதாசிவ மூர்த்தியின் உருவம் சுதையால் நிர்மாணிக்கப்பட்டிருக்

கிறது. பிரம்மோற்சவம் பங்குனி மாதம், இங்குள்ள குளம் அழகானது. திருஞானசம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. இங்கு இரண்டு முக்கிய சத்திரங்கள் உள. கோயிலில் பல கல்வெட்டுகள் உள. அவற்றுள் ஒன்று அச்சுததேவராயர் காலத்தியது (1572—1614). இங்குள்ள அஷ்டகோண மண்டபம் பார்க்கதக்கது. இங்குநவக்கிரஹங்கள் வரிசையாக இருக்கின்றன. இங்கு சட்டைநாதர் கோவில் ஒன்றுள்ளது. தேவி அணிந்திருக்கும் மாங்கல்யம் இரும்பாலாய தென்பர். ஸ்வாமிக்கு வினைதீர்த்த பெருமாள் என்றும் பெயர். இங்கு 5 கோபுரங்கள் உண்டு, ஓர் இடத்தில் நின்று பார்த்தால் இவ்வைந்து கோபுரங்களையும் ஏககாலத்தில் தரிசிக்கலாம்; பெரிய கோபுரம் 9 நிலையுடையது. இங்கு கோதண்ட தீர்த்தம் என்று ஒரு தீர்த்த முண்டு. கோயில் தர்மபுர ஆதீனம் மேற்பார்வையிலடங்கியது.

**வைலகம்**—வயல்+அகம்=வைலகம் ஆயதாம்; புதுக்கோட்டை சமஸ்தானம், பழய சிவாலயம், இங்குள்ள தட்சிணாமூர்த்தி விக்ரஹம் அழகியது.

**ஜக்கனஹல்லி** — மைசூர் ராஜ்யம், கள்ளேஸ்வரர் கோயில்; 1710௵ கட்டப்பட்டது, சளுக்கிய சில்ப மமைந்தது.

**ஜகதமல்லம்** — தென் இந்தியா சிவாலயம், ஸ்வாமி பரமேஸ்வரர், தேவி சுந்தரவல்லி.

**ஜகந்நாதம்**—அல்லது பூரி; மத்ய இந்தியாவிலுள்ளது. (பிரபல விஷ்ணு ஸ்தலம்) இங்குள்ள சிவாலயங்கள் (1) **மார்க்கண்டேஸ்வரர்** கோயில், ஸ்வாமி மார்க்கண்டேஸ்வரர்; 811—829௵ங்களில் ஆண்ட குண்டலகேசரி என்பவரால் கட்டப்பட்டது. (2)**லோகநாதர்**கோயில்; சிவலிங்கம் தண்ணீர் நிரம்பிய தொட்டியில் இருக்கிறது; தண்ணீரை இரைத்துவிட்டு தரிசனம் செய்யவேண்டும்; பூரி ஸ்டேஷனிலிருந்து 2 மைல் தூரம், (3) இங்குள்ள விஷ்ணு ஆலயத்தின் உட் பிராகாரத்தில் **பாதாளேஸ்வரர்** கோயில் எனும் சிவாலயமுளது. அன்றியும் இன்னும் 12 சிவலிங்கங்கள் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. இங்கு அருகில் **மஹாதேவர் மந்திரம்** எனும் மற்றொரு சிவாலயமுமுண்டு. இக்கோயில்களெல்லாம் ஆரிய சில்பம். (4) ஜலகண்டேஸ்வரர் கோயில், இங்கு அருகிலுள்ள சித்ரகோட் குன்றில் ஒரு சிறு சிவாலயமுளது. ஜகந்நாதம் கோயில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் சிவாலயமாயிருந்த

தாக மென்றி துரைகூறுகிறார். அக்காலம் இங்கு சிவம், துர்க்கை, கணேசர் பூசிக்கப்பட்டதாம். (5) கபொதேஸ்வரர் கோயில், (6) கோடிலிங்கேஸ்வரர் கோயில். (7) நீலகண்டேஸ்வரர் கோயில்.

**ஜகமண்டா** — விசாகபட்டணம் ஜில்லா, சென்னை ராஜதானி, மல்லிகேஸ்வரர் கோயில்; ஒரு சிறு குன்றின் மீதுள்ளது.

**ஜப்பல்பூர் பிரிவு** — மத்ய மாகாணம் — தில்வாரா கிராமம்—பழய சிவாலயம், ஸ்வாமி திலவண்டேஸ்வரர் (திலம்=எள்) இங்குள்ள மற்ற சிவாலயங்கள் (1) தேவார் கிராமம், ஜப்பல்பூருக்கு 8 மைல், பழய பெயர் திரிபுரம் அல்லது கிரிபுரி, சிவாலயம்; ஸ்வாமி திரிபுரேஸ்வரர், (2) பிலஹரி சிவாலயம்; ஓர் அரசியால் 11-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. (3) பீர்கட் - நர்மதை கரையிலுள்ளது. ஜி.ஐ.பி. ரெயில், மீர்கன்ஜ் ஸ்டேஷனிலிருந்து 3 மைல். கௌரிஷங்கர் கோயில் (4) பார்கோவன் சிவாலயம், ஸ்வாமி சோமநாதர்; குப்த சில்பம், 5 அல்லது 6-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோயில் (5) ஓங்காரம்-ஜப்பல்பூருக்கு 6 மைல், நருமதைக் கரையிலுள்ளது. ஜோதி லிங்கங்களில் ஒன்று. இங்கு பாண லிங்கங்கள் எடுக்கப் படுகின்றன.

**ஜம்புநாதம்** — பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி, ஹொஸ்பெட் ஸ்டேஷனுக்கு 2 மைல்; சிவாலயம் சிறு குன்றின் மீதுளது. 14-ஆம் நூற்றாண்டில் ஆண்ட விஜயநகரத் தரசனாகிய ஜம்புகேஸ்வரராயரால் கட்டப்பட்டது. கோயிலுக்குக் கிழக்கில் பாறையில் வெட்டப்பட்ட கிணறு ஒன்றுண்டு; இதன் ஜலமானது வியாதிகளைத் தீர்க்கும் குணமுடையதென்பர்.

**ஜம்பை** — சென்னை ராஜதானி, நாகர்கோயில் தாலூகா, சிவாலயம்—தேவி அகிலாண்டேஸ்வரி.

**ஜவால்மல்**—பஞ்சாப் மாகாணம், ஜிண்டா சமஸ்தானம், சிவாலயம் குளத்தருகிலுள்ளது, ஸ்வாமி ஜவால்மல் ஈஸ்வரர் கோயில், இங்கு பொகார்கேரி எனும் கிராமத்தில் மஹாதேவர் சிவாலயமுண்டு.

**ஜாங்கலம்** — வட இந்தியா; சுயம்புலிங்கம்; ஸ்வாமியின் பெயர் கபர்தின்—கங்காதீஸ்வரர்.

**ஜாலேஸ்வரம்**—வட இந்தியா; சுயம்புலிங்கம்; ஸ்வாமி திரிசூலி.

**ஜாவாதீவு** — இந்திய சமுத்திரத்திலுள்ள தீபம், இங்குள்ள சிவாலயங்கள் (1) **பைணாதூரம்** சிவாலயம்; இலமா யிருக்கிறது. (2) **காடு**—இங்கு 723ஆம் ஒரு சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. பரமசிவத்திற்கு ஜாவா தீவில் பட்டாரகுரு என்று திருநாமம். (3) பிராம்பனன் (பிரம்மவனம்) இங்கு சில சிவாலயங்கள் இருந்தன. தற்காலம் எல்லாம் இலமா யிருக்கின்றன. கோயிலில் 42 ராமாயணக்கதை காட்சிகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இங்கு பரமசிவத்திற்கு வார்ட்ஜோங்கிராஜ் என்று பெயர். (4) **இங்கடெரேகோ** பிரிவு, இங்கு, **போகட்**, **பிரங்கபான்ஸ்**, இவ்விரண்டிடங்களிலும் சிவாலயங்கள் உள. தற்காலம் மிகவும் இலமாய்க் கிடக்கின்றன. (5) **போரோபதூர்**—ஒரு கல் வெட்டினால் சஞ்சயன் எனும் அரசன் ஜாவா தீபத்தில் தன் சொந்த ஊராகிய குஞ்சா குன்ஜா (ஆனெகுந்தி ?) யெனுமிடத்தி லிருப்பதுபோல, ஒரு சிவாலயம் கட்டினதாகத் தெரிகிறது. இங்கு **ஜோக் ஜிகார்டா**வுக்கு 10 மைலில் சிவாலயம் உளது; இதற்கு லாரா ஜோங்கிராஜ் என்று, (இந்தனிஷியன் பாஷையில்) பெயர். இங்கு மொத்தம் 8 சிவாலயங்கள் உள; கி.பி 9-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டவை; பாழடைந்த முக்கிய சிவாலயம், 180 அடி உயரம், தற்காலம் மராமத்து செய்யப்பட்டு வருகிறது. இதில் நான்கு விடுதிகள் உள. முக்கியமானது கிழக்குப் பார்த்தது; இதில் சிவபெருமான் சிலை உருவம் இருக்கிறது. மற்ற மூன்று விடுதிகளில் அகஸ்தியர், கணேசர், தேவி சிலைகள் இருக்கின்றன. தேவியின் சிலை ஒரு இண்டனேஷியன் பெண்ணைப்போல் இருக்கிறது. அதன் பெயர் லாராஜோங்கிராஜ் = மெல்லிய கன்னிகைப் பெண், என்று அர்த்தமாகும். கோயிலில் பரமசிவத்தின் 32 தாண்டவ நடனத்தின் கோலங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன, ராமாயணக் கதையும் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இங்கு பெரிய கோவிலின் பக்கலில் பிரம்மாவுக்கும் விஷ்ணுவுக்கும் கோயில்கள் இருந்தன என்று கூறப்படுகிறது. (2) இங்கு (ஜாவா தீவில்) **தென் கிடோய்** (Kidoe) எனும் இடத்தில் ஒரு சிவாலயமுண்டு. அகஸ்திய கோத்திரத்தில் பிறந்த ஒரு பிராம்மணனால் கட்டப்பட்டதென்று ஒரு கல்வெட்டு கூறுகிறது. (3) குஞ்சா குஞ்சு தேசத்தில் ஒரு சிவாலயமுளது. குபேரர் என்பவர் கட்டியதாகச் சொல்லப்படுகிறது. ஒரு கல்வெட்டின்படி அகஸ்தியர் கட்டியதாகச் சொல்லப்படுகிறது. இவ்விடம் அகஸ்தியர் சிலை கண்டு பிடிக்கப்பட்

டிருக்கிறது. (4) ஜாவா தீவுக்கு அருகிலுள்ள பாலி எனும் சிறு தீவில், பொய்லிங் (Boeling) எனு மிடத்தில் ஒரு சிவாலயம் உளது. அதன் பெயர் சாங்சித் (Sangsit); இது திராவிட சில்பமமைந்ததெனச் சொல்லப்படுகிறது.

ஜான்சி ஜில்லா — ஐக்கிய மாகாணம், இங்குள்ள சிவாலயங்கள் (1) பார்வாசாகர் கிராமம், சிவாலயம்—குப்த அரசர் காலத்தில் கட்டப்பட்டது, (2) சாண்டபூர் கிராமம், சிவாலயம்; சஹேஸ்வர லிங்கம், (3) தூதாய் கிராமம் — இங்குசுமார் 1000 வருடங்களுக்குமுன் விஷ்ணு, பரமசிவம், பிர்ம்மாவுக்கு 3 கோயில்கள் வடக்கு, தெற்கு, மேற்காக யசோவர்மன் எனும் அரசனால் கட்டப்பட்டன; இவை தற்காலம் பாழடைந்திருக்கின்றன.

ஜான்சி—வட இந்தியா ரெயில் ஸ்டேஷன் - இங்குள்ள முக்கிய சிவாலயங்கள் (1) திவாரி சிவாலயம், (2) தசாஸ்வமேத மஹாதேவர் ஆலயம், (3) சிவகுடி ஈஸ்வரர் ஆலயம்.

ஜான்பூர் ஜில்லா—ஐக்கிய மாகாணம், கோபால்பூர் கிராமம், இங்கு இரண்டு பழய சிவாலயங்கள் உள. ரேகி கிராமம், சிவாலயம்—திரிலோக மஹாதேவ் கோயில் அல்லது திரிலோசன மஹாதேவ் ஆலயம்.

ஜான்னூர்—பம்பாய் ராஜதானி, பூனா ஜில்லா, இங்குள்ள சிவாலயங்கள், (1) பஞ்சலிங்கம், சிவனெரிகுன்றின் அருகில் உள்ளது, (2) பாதாளேஸ்வரர் கோயில்—பூமி மட்டத்தின் கீழ் கோயில் உளது, (3) உத்தரேஷ்வர்—ஊருக்கு ½-மயில் தூரம் உளது. இங்கு ஒரு குகைக்கோயில் உண்டு பூனாவுக்கு 48 மயில் தூரத்தில்; கோயில் வட்டவடிவமானது. வட்டத்தின் குறுக்களவு 25 அடி; 12 தூண்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இது ஆதியில் புத்த ஆலயமாயிருந்து பிறகு அதிலிருந்த தாதுகர்ப்பம் (தாகோபா) சிவலிங்கமாக மாற்றப்பட்டதென டாக்டர் பர்கூசன் கூறுகிறார்.

ஜானகட்—வட இந்தியா ரெயில்ஸ்டேஷன், சிவாலயம், ஸ்வாமி அப்பாஜிசிவம், தேவி பார்வதிதேவி.

ஜெஜூரி — பம்பாய் ராஜதானி, பூனாஜில்லா, ஸ்வாமி கண்டோபா, பரமசிவத்தின் அவதாரம் என்று இங்குள்ளவர்கள் கூறுகின்றனர்.

ஜெஸ்ஸோர் பிரிவு — வங்காள ராஜதானி, வட இந்தியா—மாமுட்பூர் கிராமம், சிவலாயம்; நாடோர் ராஜாக்களால் கட்டப்பட்டது.

**ஜோத்பூர் சமஸ்தானம்**—இங்குள்ள சிவாலயங்கள் (1) பலிஹாகுபட் பிரிவு, நாதாகிராமம், நீலகண்ட மஹா தேவர் கோயில் (2) பிலாராஹாகுமத் பிரிவு, சிவாலயம், மஹாதேவர் பார்வதி; கோயில் 1,200 வருடங்களுக்கு மூந்தியது என்று எண்ணப்படுகிறது. (3) நாதோல் சோமேஸ்வரமஹாதேவ் கோயில், சோமநாதர் கோயில் (4) சாத்ரி கிராமம், தாசூரி பிரிவு, சிவாலயம் (5) ஜஸ்வந்தபூர் ஹாகுமத் பிரிவு, ரதன்பூர் கிராமம், சிவாலயம், புராமாட்சதேவரால் 11-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. (6) ஜோட்பூர் ஹாகும் பிரிவு. ஆர்ஞ்கிராமம், சிவாலயம். (7) மல்லாணிபிரிவு; கொடு கிராமம்; இங்கு 3 சிவாலயங்கள் உள, மூன்றும் மேற்கு பார்த்தவை (8) சோடான் கிராமம்; இங்கும் 3 சிவாலயங்கள் உண்டு, பாழடைந்திருக்கின்றன. (9) நாகௌர் பிரிவு, சிவாலயம்; இங்கு மஹாதேவர் லிங்கமும், கிருஷ்ண விக்ரஹமும் அக்கம் பக்கமாயிருக்கின்றன. (10) பாலிபிரிவு; பாலி கிராமம், சோமநாதர் கோயில்; 1143௵ குஜராத் அரச குமாரபாலர் கட்டியது (11) சிரோஹி பிரிவு, அசல்கர் கிராமம், அசலேஸ்வரர் கோயில்; இங்கு பரமசிவத்தின் கால் விரல் நகம் இருப்பதாக ஐதிகம்; கோயில் மேற்கு பார்த்தது, நந்தி பெரியது, பித்தளையாலாயது, (12) சிரோஹி பட்டணம், சிவாலயம், சலவைக் கல் கட்டிடம், ஸ்வாமிசாரணேஷ்வர்; கோயில் மேற்கு பார்த்தது; சுமார் 500 வருடங்களுக்குமுன் கட்டப்பட்டது. கோயிலுக்கு எதிரில் 12 அடி உயரமுள்ள திரிசூலம் இருக்கிறது. (13) வசந்தகர் கிராமம், சிவாலயம் இடிந்திருக்கிறது. 7-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

**ஜோதி கிராமம்** — கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி, சித்தவட்டம் தாலூகா, சிவாலயம், முகலிங்கம்; ஸ்வாமி சித்தேஸ்வரர்.

**ஜொலதாசி**—பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி, பல்லாரிக்கு 13 மைல், சிவாலயம்; ஸ்வாமி ராமலிங்கேஸ்வரர்.

**ஜெநார்த்தனம்** — திருவாங்கூர் ராஜ்யம், திருவநந்தபுரத்திற்கு 23 மைல், சிவாலயம்; பாலபுரீசர் பாலசுந்தரி; சமுத்திர தீர்த்தம். விஸ்வாமித்திரர் பூசித்தது.

**ஜெய்புரம்**—ஒரிஸ்ஸாவிலுள்ளது, சிவாலயம்.

**ஜோலார்பேட்டை** — சென்னை ராஜதானி, ரெயில் ஸ்டேஷன்; சிவாலயம்.

**ஸ்ரீகண்டேஸ்வரர் கோயில்**—திருவாங்கூர் ராஜ்யம் சிவாலயம்.

**ஸ்ரீகாகுளம்**—குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி, செல்லபள்ளி ஜமீன் தாரியிலுள்ளது—ஸ்ரீகாகுளேஸ்வரர் கோயில்; இங்கு மல்லேஸ்வரர் கோயில் என்று மற்றொரு சிவாலய முண்டு.

**ஸ்ரீகூர்மம்** — கஞ்சம் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்; ஸ்வாமி கூர்மேஸ்வரர்.

**ஸ்ரீசைலம்**—நந்திகோட்டூர் தாலூகா, கர்னூல் ஜில்லா; எம். எஸ். எம். ரெயில்வே நந்தியால ஸ்டேஷனி லிறங்கி, 32 மைல் பஸ்ஸில் ஆத்மகூருக்குப் போய், அங்கிருந்து 32 மைல் கால்நடையாய்ப் போகவேணும். மலை சமுத்திர மட்டத்திற்கு 1400 அடி உயரம்; மூன்றுபாகமும் கிருஷ்ணை நதியால் சூழப்பட்டிருக்கிறது. நல்ல மலை காட்டின் மத்தியி லுள்ளது. இதற்கு பருவதம் என்பது தேவாரப் பெயர். (சைலம் - பர்வதம்) இதற்கு மல்லிகார்ஜுனம் என்றும் பெயர் உண்டு. மிகவும் பழமையான பெயர்பெற்ற சிவால யம்; ஸ்வாமி பர்வதநாதர், மல்லிகார்ஜுனர்; தேவி பர்வத நாயகி, பிரமராம்பாள்; அம்பா தீர்த்தம் பாலாழி தீர்த் தம்; மலைக்கு ரிஷபகிரி என்று பெயர். நந்தி தேவர் பூசித்து முத்திபெற்ற ஸ்தலம், பிருகு முனிவர் பூசித்த க்ஷேத்திரம்; இங்கு பாதாளகங்கை யெனும் தீர்த்தமுண்டு. இதிலிருந்து லிங்க உருவங்கள் எடுக்கப்படுகின்றன. இங்கு 3 கோடி லிங்கங்கள் இருப்பதாக ஐதிகம். கோயிலில் பிருங்கி மஹரிஷியின் சிலையுளது. இக்கோயில் ஆதி காலத்தில் பௌத்த ஆலயமா யிருந்த தென்பர். பழய கோயில் மகம்மதியர்களால் அழிக்கப்பட்டு, பிறகு புதுப் பிக்கப்பட்டது. முற்காலத்தில் கோயில் முழுவதும் பொன் வேய்ந்திருந்த தென்பர். இங்குள்ள கல்யாண மண் டபம் 1526 ௵ கிருஷ்ணதேவராயர் காலத்தில் கட்டப் பட்டது; முகமண்டபம் 1404 ௵ விஜயநகரத்தரசர் ஹரி ஹரரால் கட்டப்பட்டது. இங்குள்ள கோபுரங்கள், 16 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக பெர்கூசன் துரை எண்ணு கிறார்; மேற்கில் ராயகோபுரம் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி யாகாமலிருக்கிறது; வீரமண்டபம் 1377 ௵ கட்டப்பட்டது. கோயிலிலுள்ள பாசுபதாஸ்திரமூர்த்தி மிகவும் கலை யுடையது. கோயில் 630 அடி நீளம், 510 அடி அகலம்; மதில் 12 அடி உயரம். கோயிலின் வடக்கில் விருத்த மல்லிகார்ஜுன லிங்கம் இருக்கிறது; சந்திராணியெனும்

அரச குமாரியால் மல்லிகை மலர்களால், பூசிக்கப்பட்டது என்பர். (எனவே ஸ்வாமி பெயர் மல்லிகார்ஜுனர்) கோயிலின் கிழக்கில் சஹஸ்ரலிங்கம் இருக்கிறது; நான்கு வர்ணத்தாரும் தீண்டி பூஜிக்கலாம். மூவர் பாடல்பெற்ற திவ்ய க்ஷேத்திரம்; இங்குள்ள லிங்கம் ஜோதி லிங்கங்களி லொன்றும். பிரமராம்பாள் கோயில், ஸ்வாமி கோயிலுக்கு வெளியே இருக்கிறது.

**ஸ்ரீதேவர்**—இந்தியாவுக்கு கிழக்கிலுள்ள சையாம் அல்லது சியம் தேசத்திலுள்ளது இங்கு இருந்த பழைய சிவாலயம் தற்காலம் மிகப் பாழா யிருக்கிறது; சிவலிங்கம் மாத்திரம் அழியாதிருக்கிறது.

**ஸ்ரீநகர்**—ஐக்கிய மாகாணம். கார்வார் ஜில்லா—கமலேஸ்வரர் கோயில்; லிங்கபூஜை இங்குதான் ஆரம்பித்தது என்பது ஸ்தல ஐதீகம். மஹாவிஷ்ணுவும் ஸ்ரீ ராமரும் பூசித்த க்ஷேத்திரம். ஊரின் பழைய பெயர் அஸ்வதீர்த்தம், ஸ்ரீக்ஷேத்திரம்; அலகநந்தநதி. பூஜைசெய்யும் குருக்களுக்கு மஹந்த் என்று பெயர்.

**ஸ்ரீநகர்**—வட இந்தியா காஷ்மீரத்தின் தலைநகர். ஜம்முவிலிருந்து 197 மைல் தூரம்—சங்கரர் கோயில்.

**ஸ்ரீநிவாசநல்லூர்**-திருச்சிராப்பள்ளிஜில்லா, சென்னை ராஜதானி; பழைய சிவாலயம். தற்காலம் பூஜையில்லை. காஞ்சி கைலாசநாதர் கோவில் சில்பத்தைப் போன்றது.

**ஸ்ரீ புருஷமங்கலம்**—வந்தவாசி தாலுக்கா வடஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி—மணிகண்டேஸ்வரர் கோயில். கோயிலில் பல கல்வெட்டுள்ளன.

**ஸ்ரீபெரும்பூதூர்**—இதன் பழைய பெயர் பூதபுரி. சென்னைராஜதானி. இங்குபழைய சிவாலயம் ஒன்றுளது. 700 வருடங்களுக்கு முற்பட்டது. ஸ்வாமி பெயர் பூதபுரீஸ்வரர். வைஷ்ணவ ஆசாரியார் ராமானுஜர் காலத்தில் இவ்வூரின் பெயர் ஸ்ரீபெரும்பூதூர் என்று மாற்றப் பட்டது.

**ஸ்ரீமுஷ்ணம்**—தென் ஆற்காடு ஜில்லா, சென்னைராஜதானி; சிவாலயம்; ஸ்வாமி நித்யேஸ்வரர், மானக்கஞ்சாரநாயனர் முத்தியடைந்த ஸ்தலம்.

**ஸ்ரீரங்கபட்டணம்**—மைசூர் ராஜ்யம். மைசூருக்கு 5 மைலில் உள்ளது. காவிரி இரண்டு பக்கமும் போகிறது: கோயில் மைசூர் சமஸ்தானத்தாரின் பார்வையி லிருக்கிறது. ஸ்வாமி கங்காதரீஸ்வரர், தேவி பார்வதி. கோவில் விஜயநகரச்சில்பம். இங்குள்ள செம்பினலாகிய அழகிய

தட்சிணாமூர்த்தி விக்ரஹம் தளவாய்நஞ்சராஜனால் சமர்ப்பிக்கப்பட்டது.

**ஸ்ரீவில்லிபுத்தூர்** — இங்குள்ள பெருமாள் ஆலயம் ஓர் பழைய சிவாலயத்தின்மீது கட்டப்பட்டதாக எண்ண இடமுண்டு.

**ஸ்ரீராமநகரம்**—வட இந்தியா ரெயில் ஸ்டேஷன்—சிவாலயம்.

**ஸ்ரீவைகுண்டம்**—மேற்படி தாலுகா திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி—சிவாலயம் கைலாசபுரத்திலுள்ளது. ஸ்வாமி கைலாசபதி, தேவி சிவகாமி, தாமரபர்ணிநதி. இங்கு முசாபர்பங்களா உண்டு, சத்திரமுமுண்டு.

**ஸ்தானேஷ்வரம்**—டில்லிக்கு 97 மைல் வடக்கிலுள்ளது—சிவாலயம், ஸ்வாமி ஸ்தானேஷ்வர்; இங்கு 360 தீர்த்தங்களிருப்பதாக ஐதிகம்.

**ஸ்ரமணபெல்கோலா** — மைசூர் ராஜ்யம், ரெயில் ஸ்டேஷனாகிய ஹோரளே நரசிபூருக்கு 25 மைல். பஸ்போகிறது தினம், (இங்குள்ள ஜெய்ன விக்ரஹம் இந்தியா முழுவதும் பிரசித்தி பெற்றது) இங்கு சில சிவாலயங்களுண்டு.

**ஸ்டேட்பள்ளி கிராமம்** — சென்னை ராஜதானி, சிவாலயம், ஸ்வாமி வன்மீகேஸ்வரர், தேவி மரகதவல்லி, வால்மீகிரிஷி, குசலவர்கள், பூசித்த க்ஷேத்திரம்.

**ஸ்வர்ணக்ஷா** — வட இந்தியா சிவாலயம், சுயம்புலிங்கம், ஸ்வாமி சஹஸ்ராட்சர், சஹஸ்ர - அக்ஷர் (ஆயிரம் கண்களை யுடையவர்)

**ஷம்புகல்**—ஷம்புசைலம், ஷம்புகிரி எனவும் பெயர் பெற்றது, மேற்கு சென்னைராஜதானி; உடுப்பிக்கு 1 மைல்; கோயில் பாழாயிருக்கிறது, ஸ்வாமி பெயர் ஹாடகேஷ்வர் (ஹாடகேஷ்வர் ?) தேவி பார்வதி, லிங்கம் சிறியது 18 அங்குலம் உயரம்; இங்கு ஒரு குகை பாதாளத்திற்குப் போவதாக ஐதிகம்; மார்க்கண்டேயர் பூசித்த ஸ்தலம், பழைய கோயில் அழிக்கப்பட்டது. பிறகு தற்காலக் கோயில் கட்டப்பட்டது. இங்கு பூர்வத்தில் சித்த தீர்த்தம், கன்யா தீர்த்தம், ஹைறம்ப தீர்த்தம், ஸ்ரீ தீர்த்தம், முதலிய தீர்த்தங்கள் இருந்தனவாம்; தற்காலம் ஸ்ரீ தீர்த்தம் மாத்திரம் இருக்கிறது.

**ஷாஜஹான் பிரிவு**—வங்காள ராஜதானி, இங்குள்ள சிவாலயங்கள் (1) பைத்நாத் கிராமம், சிவாலயம் 1372ஞ

கட்டப்பட்டது ஒரு மண் மேட்டின்பேரில்; அதைத் தோண்டும் பொழுது அதன்கீழ் ஒரு பழய சிவாலயம் அகப்பட்டது. (2) பக்சார் பிரிவு, சிவாலயம் ஸ்வாமி ராமேஸ்வர்நாத் மஹாதேவர். (3) தேவ் மார்க்கண்டே யர், ஸ்வாமி சௌமுகி மஹாதேவர். (நான்கு முகங்க ளுடைய லிங்கம்) (4) குப்தேஸ்வர் குகைக் கோயில்—ஸ்வாமி மஹாதேவர்; லிங்கத்தின்மீது எப்பொழுதும் தீர்த்தம் துளித்துக்கொண்டிருப்பதாக ஐதிகம். (5) மஹா தேவ்பூர் சிவாலயம்—முற்றிலும் செங்கல் கட்டிடம். (6) மண்டேஸ்வரி சிவாலயம்—ஸ்வாமி மண்டேஸ்வரர்; லிங் கம் நான்கு முகங்களுடையது.

**ஷிமோகா**—மைசூர் ராஜ்யம், ரெயில் ஸ்டேஷன்; சிவாலயம்; ஸ்வாமி பீமேஸ்வர்.

**ஷிவமந்திர்**—நிஜாம்ராஜ்யத்திலுள்ளது, சிவாலயம்.

**ஹட்கல்லி**—பல்லாரி ஜில்லா சென்னை ராஜதானி. சிவாலயம்—ஸ்வாமி கள்ளேஸ்வரர்; கோயில் சளுக்கிய கட்டடம்; கட்டி முடியவில்லை.

**ஹம்பி**—பல்லாரி ஜில்லா சென்னை ராஜதானி. ஹாஸ்பெட் ஸ்டேஷனிலிருந்து 7 மைல். பழைய விஜய நகரத்தரசர்களுடைய ராஜதானி. விருபாட்சர் கோவில்—ஸ்வாமி விருபாட்சர். விஜயநகர அரசர்களுடைய குல தெய்வம். கோபுரம் 165 அடி உயரம். இதற்கு பம்பா பதீஸ்வரர் கோவில் என்றும் பெயர். 1199௵ கட்டப் பட்டது. ஹம்பி கிராமமானது இக்கோயிலுக்கு மானிய மாகக் கொடுக்கப்பட்டது. கங்கமண்டபமும் கோபுரமும் கிருஷ்ணதேவராயரால் கட்டப் பட்டதாம். இங்குள்ள கோயில்களில் இதுதான் மிகப் பழைமையானது. இங் குள்ள வாசற்படிகளும் ஸ்தம்பங்களும் கருநிறமுடைய கற் களால் செய்யப்பட்டவை; இவை 13ஆம் நூற்றூண்டில் செய்யப்பட்டவை என்று மதிக்கப்படுகிறது; சளுக்கிய சில்பம் மஹாமண்டபமும் வெளி கோபுரமும் 15ஆம் நூற் றூண்டில் கட்டப்பட்டவை; விஜயநகரச் சில்பம். இங் குள்ள ஒரு கற்றூண் சங்கீத ஸ்வரங்கள் சப்திக்கும்படி யானது.

**ஹமீர்பூர் ஜில்லா**—ஐக்கிய மாகாணம், மஹோபா கிராமம்—சிவாலயம். இது மதன்சாகர் எனும் ஏரியின் ஒரு பக்கமுள்ள தீவில் இருக்கிறது.

**ஹாரிஷகா**—வட இந்தியா, சிவாலயம். சுயம்பு லிங்கம்; ஸ்வாமி ஹரிஷகேசர்.

ஹரத்வார்—ஹரித்வார் என்றும் வழங்கப்படுகிறது. வட இந்தியா ரெயில் டேஷன். சிவாலயம்—ஸ்வாமி தட்சேஸ்வரர். இதில் வீரபத்ரர் சிலையும், பத்ரகாளியின் சிலையுமிருக்கின்றன. இங்கு 40 சத்திரங்களுக்குமேல் உண்டு. (2) பில்வகேஸ்வரர் கோவில்—பில்வகேஸ்வரம் எனும் சிறு குன்றின்மீதுளது. (3) நீலேஸ்வரர் கோவில்—லிங்கம் நீலன் எனும் பக்தனால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. (4) சரவணநாத்மநாதேவ் கோயில்—இங்கு 5 முகங்களோடு கூடிய சிவமூர்த்தியுண்டு.

ஹரஹல்லி—தார்வார் ஜில்லா, பம்பாய் ராஜதானி—சவுடம்பூருக்கு 3 மைலில் சோமேஸ்வரர் கோயில். சளுக்கிய கட்டடம்; 3 சந்நிதிகளை யுடையது.

ஹரஹர்பூர்—இமயமலை, சிவஸ்தலம்.

ஹரிஹர்—இதன் பெயர் குஹாரண்யம், சிட்டல்துர்க் ஜில்லா, மைசூர் ராஜ்யம், துங்கபத்ரை கரையிலுள்ளது. பெரிய கோயில; அழகிய சில்பங்கள் அமைந்தது; ஸ்வாமி பெயர் ஹரிஹரேஸ்வரர்; விக்ரஹம் 4 அடி உயரம், வலப் பாகப் பாதி சிவம், இடப்பாகப் பாதி விஷ்ணு. தற்காலக் கோயில் 1224ஹு இரண்டாவது நரசிம்மரது மந்திரியாகிய போலால்வர் தண்டநாதன் அல்லது சோமநாதர் என்பவரால் கட்டப்பட்டது. இக்கோயில் சில காலம் மகம்மதியர்கள் கையிலிருந்தபோது, கோயிலின் மேற்கூரையை மசூதியாக உபயோகித்தனர்; சளுக்கிய கட்டடம்; மகா மண்டபமும், அம்மன் சந்நிதியிலுள்ள சில்பங்களும் மிகவும் அழகியவை. கோயில் முடிக்கப்பட்டிருந்தால் இதைவிட அழகிய ஹிந்து ஆலயம் உலகத்திலே வேறெங்கும் இராது எனக் கூறலாம் என்று பெர்கூசன் புகழ்ந்திருக்கிறார். இங்கு அருகில் காசிவிஸ்வேஸ்வரர் கோயில் உளது — சிறிய கோயில், கோயிலில் லிங்கமில்லை; பரமசிவத்தின் சிலை இருக்கிறது. குஹாசுரனைக்கொல்ல பரமசிவமும், விஷ்ணுவும் ஹரிஹர ரூபம் தரித்தனர் என்பது ஐதிகம்.

ஹலசூர்—மைசூர் ராஜ்யம், பெங்களூரின் ஒரு பாகத்திலுள்ளது—சிவாலயம், சோமேஸ்வர் கோயில், கெம்ப கௌடரால் 17-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் கட்டப்பட்டது.

ஹலஜி—மைசூர் ராஜ்யம், சிவாலயம்; ஸ்வாமி ஹத்திகேஸ்வரர்; துளைக்கப்பட்டஸ்கிரீன்கள் (Screen) உடையது; ஹொய்சால சில்பம்.

ஹளபீடு—ஹலபீடு என்றும் அழைக்கப் படுகிறது. ஹளேய பீடு சரியான பெயர். கன்னட பாஷையில் பழய இருப்பிடம் என்று பொருள் படும். மைசூர் ராஜ்யத்தி லுள்ளது. பூனா ரெயில் பாதையில் பாணவரம் ஸ்டேஷ னுக்கு 20 மைல் தெற்கு. இதன் பழய பெயர் தொரசமுத் திரம். (துவார சமுத்திரம் என்றும் அழைக்கப்பட்டது) இங்குள்ள சிவாலயங்கள் (1) ஹொய்சலேஸ்வரர் கோயில் —இது இரட்டைக் கோயில், இரண்டு சந்நிதிகளுண்டு; ஒவ்வொன்றிலும் சிவலிங்கம்; ஒவ்வொன்றிற்கும் எதிரில் பெரிய மண்டபத்தில் நந்தி யுண்டு. ஒருலிங்கம் விஷ்ணு வர்த்தனராலும், மற்ரொன்று அவர் மனைவியாகிய சாந்தா அல்லது சாந்தளா தேவியாலும் பிரதிஷ்டை செய்யப் பட்டது. கோயில் வடக்கு தெற்கு 160-அடி, கிழக்கு மேற்கு 122 அடி; உயரம் 25 அடி மேடைக்கு மேல்; கீழ் மட்டம் அல்லது மேடை சுமார் 5 அல்லது 6 அடி உயரம். கோயில் 1221 ஹு ஆரம்பிக்கப்பட்டது; முற்றிலும் முடிக் கப் படவில்லை. விமானங்கள் கட்டப்படுமுன் 1310ஹு மாலிக்காபூர் எனும் மகம்மதியர் தலைவன் கையிற் சிக்கி னது; அவர்கள் இங்குள்ள சிலஅழகிய சிலைஉருவங்களைப் பாழாக்கி யிருக்கின்றனர். கோயிலின் அடிமட்டம் நட்சத்திரத்தைப் போல் கோணல்கள் உடையது; இதற்கு மேல் வரிசை யானைகள்; இவை 710 அடி சுற்றளவிலும் செதுக்கப்பட் டிருக்கின்றன; சுமார் 2000 இருக்கலாம்; இவை ஒவ்வொன்றும் ஒரு நிலையில் செதுக்கப் பட்டிருக் கிறது; ஒன்றைப்போல் மற்ரொன்று கிடையாது. இதற்கு மேல் வரிசை சார் தூலங்கள்; அதற்குமேல் அழகிய கொடி வேலை; அதற்குமேல் குதிரை வீரர்கள் வரிசை; அதற்குமேல் கொடி வேலை; அதற்குமேல் ராமாயண பாரதக் கதைகளின் சில்பங்கள்; அதற்கு மேல்வரிசை மிருக பட்சிகளுடைய உருவங்கள்; அதற்குமேல் மனித உருவங்கள், தெய்வச் சிலைகள். பக்கங்களில் அழகிய பலகணிகள்; நடுவில் தேவதைகளின் உருவங்களும் அப்சரஸ்திரீகளின் உருவங்களும் இருக்கின்றன. இங்கு இந்து மத தேவதைகளின் எல்லா உருவங்களையும் காண லாம், சைவம் வைஷ்ணவம் என்கிறபேதம் கிடையாது. இப் படிப்பட்ட நுட்பமான சில்ப வேலை உலகில் வேறெங்கும் கிடையாது என்று பெர்கூசன் துரை புகழ்ந்திருக்கிருர். ஒவ்வொன்றும் பார்க்கத் தகுந்தது; ஒரு கருள் வேலை யைப் போல் மற்ரொன்று கிடையாது. சிறு விமானங் களில் (Canopy) ஒன்றைப்போல் மற்ரொன்று கிடையாது.

சந்நிதியிலுள்ள கல் ஸ்தம்பங்கள் உள்ளே மூற்றிலும் குடைந் தெடுக்கப்பட் டிருக்கின்றன. கற்பூரம் ஏற்றி உள்ளே காட்டினால் ஸ்தம்பம் முழுவதும் ஜோதியாய்த் தெரிகிறது. இங்கு நிர்த்தனம் செய்யும் சரஸ்வதி சிலை யுளது; வேறெங்கும் கிடையாது என்பர். நிர்த்தன விநாயகரும் பார்க்கத் தக்கது. இக் கோயிலுக்கு நான்கு வாயில்கள். இரண்டு கிழக்கிலும், ஒன்று வடக்கிலும் ஒன்று தெற்கிலு முளது. வாயிற் படிகளின் தோரணங்கள் மிகவும் சில்பவேலை யமைந்தவை. இரண்டு நந்தி மண்டபங்களிலுமுள்ள தூண்கள் கடைச்சல் பிடிக்கப் பட்டவை; சலவைக் கல்லைப்போல் பளபளப் புடையவை. அவைகளில் இரட்டைப் பிரதிபிம்பங்கள் தோற்றுகின் றன. தக்கணாசாரி எனும் பெயர் பெற்ற சில்பியால் பெரும் பாகம் கட்டப்பட்டதாம். சில சிலைகளின் கீழ் அவற்றைச் செய்த சில்பிகளின் பெயர்கள் செதுக்கப்பட் டிருக்கின்றன. கோயிலின் வாயில்களில் ஹொய்சல ருடைய பிருதுகள் காணப்படும் (புலியை சலன் எனும் இவர்கள் வம்சத்தரசன் கொல்வதுபோல்) கோயிலிலுள்ள தூண்கள் கவனிக்கத் தக்கவை; ஜதை ஜதையாக இருக் கும்; ஒரு ஜதையைப்போல் மற்றொரு ஜதை கிடையாது. சாணையிலிட்டு கடைந்தவைகள் போலிருக்கின்றன. சில் பங்களெல்லாம் நீல நிறம் வாய்ந்த கருப்புக் கற்க ளாலானவை; தந்தத்தில் வேலை செய்ததுபோல் வேலை செய்யப்பட் டிருக்கின்றன. (1) **கேதாரேஸ்வரர் கோயில்** —இது ஹொய்சலேஸ்வரர் கோயிலுக்கு சற்று தூரத்தில் உளது. 1219ஹ வீரபல்லாளனாலும் அவனது மனைவி களி லொருத்தியாலும் கட்டப்பட்டது. இதுவும் நட்சத் திரம் போன்ற மேடையின் மீது கட்டப்பட்டதாம்; மரங்கள் முளைத்தபடியால் இதன் விமான சிகரமும் முன் மண்ட பமும் பாழாய்ப் போயின. மைசூர் ராஜாங்கத்தார் இதை மராமத் செய்திருக்கிறார்கள். கோயிலைக் கட்டிய சில்பியின் பெயர் தேவோகர். ஹொய்சல அரசர்களின் பிருதுகள் இங்கு இருக்கின்றன.

**ஹலவகலு** — ஹர்ப்பனஹல்லி தாலுக்கா, பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி; சிவாலயம் ; ஸ்வாமி கள்ளே ஸ்வரர்; இரட்டைக் கோயில்; ஹொய்சல கட்டடம். இங்கு **மல்லிகார்ச்சுனர்** கோயில் என்று மற்றொரு சிவாலய முண்டு.

**ஹளே ஆலூர்**—இது ஹோளே ஆறு என்றும் அழைக்கப் படுகிறது. சாமராஜ நகரம் தாலுக்கா;

மைசூர் ராஜ்யம்; **அர்க்கேஸ்வரர் கோயில்**—சோழ கட்டடம்; 1020 ஆண்டில் ஆண்ட ராஜேந்திர சோழரால் கட்டப்பட்டது. பிறகு புதுப்பிக்கப்பட்டது. இங்குள்ள நந்தியின் மண்டபத்தில் தூண்கள் அழகியவை.

**ஹனும கொண்டா**—நிஜாம் ராஜ்யத்திலுள்ளது. ஐதராபாத்துக்கு 87 மைல்; காசிபெட் ஸ்டேஷனிலிருந்து சுமார் 5 மைல். இது முற்காலத்தில் வாரங்கல் அரசர்களுடைய ராஜதானியாயிருந்தது. சிவாலயம் 1162௵ காகதீய அரசனை பிரதாபருத்திர மஹா தேவரால் கட்டப்பட்டது. கோயிலில் மூன்று கர்ப்பக் கிரஹங்கள் உள. சளுக்கிய கட்டடம். ஆதியில் ஒன்றில் பரமசிவமும், ஒன்றில் மஹா விஷ்ணுவும், மற்றொன்றில் பிரம்மா அல்லது சூரியனும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. கோயில் கிழக்கு மேற்கு 102 அடி; தெற்கு வடக்கு 83 அடி 8 அங்குலம். மேற்கூறிய 3 கோயில்களின் வாயிற் படிகள் மிகவும் அழகிய சில்ப மமைந்தவை. பலகணிகள் மிகவும் அழகிய வேலைப்பாடுள்ளவை. கோயில் 3 அடி மேடையின்மீது கட்டப் பட்டிருக்கிறது. கோயில் முற்றிலும் முடிக்கப்பட வில்லை. 1000 கால் மண்டபம் ஆரம்பிக்கப்பட்டு முற்று பெறாமல் விடப்பட்டிருக்கிறது; நந்தி மண்டபமும், 1000கால் மண்டபமும் பிற்காலத்தியவை என்று மிஸ்டர் கஸின்ஸ் நினைக்கிறார். நந்தி மண்டபம் இடிந்து போயிருக்கிறது. நந்தி மாத்திரம் உடையாமலிருக்கிறது. இங்குள்ள பெரிய மண்டபம் 132 தூண்களுக்குமேல் உடையது. கோயில் நான்கு வாயில்களை யுடையது. நட்சத்திரத்தைப்போல கட்டப்பட் டிருக்கிறது. தூண்கள் மிகவும் அழகியவை.

**ஹனுமந்தகுடி**—ராமநாட் ஜில்லா, சென்னை ராஜதானி; சிவாலயம்; ஸ்வாமி மாளவநாதர்; லிங்கம் சூரிய பகவானால் பிரதிஷ்டை செய்யப்பட்ட தென்பது ஐதிகம்.

**ஹஸ்தினபுரம்**—வட இந்தியா, டில்லியிலிருந்து 36 மைல். இங்கு ஒரு சிவாலயம் இருப்பதாக காலஞ்சென்ற K. ஆறுமுகம் பிள்ளை குறித்திருக்கிறார்.

**ஹாங்கல்**—தார்வார் ஜில்லா; பம்பாய் ராஜதானி. தாரகேஸ்வரர் கோயில்; இதில் ஒரு மண்டபம் மிகவும் விசித்திரமானது. நந்தி மண்டபம் அழகியது.

**ஹார்டனஹல்லி**—மைசூர் ராஜ்யம். சிவாலயம்—ஸ்வாமி அனலேஸ்வரர்.

ஹாரப்பா—வட இந்தியா. சிந்து நதிக் கருகிலுள்ள இடம்; இங்கு சுமார் 5000 வருடங்களுக்கு முன்பாக சிவாலயம் இருந்திருக்க வேண்டுமென்று சருப்வாட்ஸ் என்பவர் எழுதி யிருக்கிறார். தற்காலம் சிவலிங்கம் மாத்திரம் அங்கு இருக்கிறது; ஸ்டியடைட் (Steatite) என்னும் கல்லாலாயது.

ஹாவேரி—தார்வார் ஜில்லா, பம்பாய் ராஜதானி. சிவாலயம்-இங்குள்ள உமா மகேஸ்வரமூர்த்தி மிகவும் கலை யுடையது. சித்தேஸ்வர்-கோயில். சவுடம்பூருக்கு 3 மைல். கோயில் மேற்கு பார்த்தது. இது ஆதியில் வைஷ்ணவ ஆலயமா யிருந்தது, பிறகு சிவாலயமாக லிங்காயத்தா ரால் மாற்றப் பட்டதாக கஸின்ஸ் துரை எண்ணுகிறார்.

ஹிமஸ்தானம்— வட இந்தியா. சுயம்புலிங்கம் —ஸ்வாமி கங்காதரர்.

ஹிரிமகளூர்—மைசூர் ராஜ்யம். சிக்மகளூருக்கு 2 மைல்--சித்தெஸ்வரர் சிவாலயம்.

ஹிரியூர்—(பெரிய ஊர்) மைசூர் ராஜ்யம். தாரமல லேஸ்வரர் கோயில்—கோபுரம் பெரியது.

ஹீரிஹாட்கல்லி—மைசூர் ராஜ்யம். காட்டேஸ்வரர் கோயில்—சளுக்கிய சில்பம்.

ஹூச்சிமல்லிகுடி—தென் இந்தியா சிவாலயம். சளுக்கிய கட்டடம்.

ஹூக்ளி பிரிவு—வங்காள ராஜதானி. இங்குள்ள சிவாலயங்கள் (1) பன்ஸ்பெரியா கிராமம். இங்கு ஹன் சேஸ்வரி கோயிலில் 13 சிவ மூர்த்திகள் இருக்கின்றன. (2) திரிவேணி சிவாலயம். (3) பத்ரேஷ்வர் கோயில்—சுமார் 200 வருடங்களுக்கு முன் கட்டப் பட்டதாம். (4) ஜானய் கிராமம்—சிவாலயம்; ஸ்வாமி ஈசானேஸ்வரர் (5)கானுகுல்-கண்டேஸ்வரர் சிவாலயம். (6) மஹாநாத் கிராமம்-மஹாநாதர் சிவாலயம். (7) தாரகேஷ்வர்—ரெயில் ஸ்டேஷனுக்கு 500 கஜத்தில் சிவாலயம். பழய கோயில் புதுப்பிக்கப்பட்டது பர்ட்வான் ராஜாவினல், சிவராத்ரி விசேஷம்.

ஹூப்ளி—மத்ய இந்தியா. ரெயில் ஸ்டேஷன் —பவானிசங்கர் கோயில்.

ஹாவினஹட்கல்லி— இதற்கு ஹிரோட்கல்லி என்றும் பெயர்? ஹடஹல்லி தாலுகா; பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி. கள்ளேஸ்வரர் சிவாலயம். சளுக்கிய கட்டடம்.

ஹாவேரி—பெல்காம் ஜில்லா; பம்பாய் ராஜதானி. சௌந்தட்டிக்கு அருகிலுள்ளது. இங்கு இரண்டு சிவாலயங்கள் உண்டு—வீரபத்திரர் கோயில்—பஞ்சலிங்க தேவர் கோயில்.

**ஹேமகூடம்**—வட இந்தியா, சுயம்புலிங்கம். ஸ்வாமி விருபாட்சர்.

**ஹேமவதி**—அநந்தபூர் ஜில்லா;சென்னை ராஜதானி. இங்கு நான்கு கோயில்கள் உள—தொட்டேஸ்வரர் கோயில், மல்லேஸ்வரர் கோயில், விருபாட்சேஸ்வரர் கோயில், சித்தேஷ்வரர் கோயில்.

**ஹொனலி**—ஹொனஹல்லி என்றும் அழைக்கப்படுகிறது. மைசூர் ராஜ்யம். சிவாலயம்—ஸ்வாமி மஹாதேவர்.

**ஹோஷங்கபாத் பிரிவு**—மத்ய மாகாணம். ஜி.ஐ.பி. ரெயில்—இங்குள்ள சிவாலயங்கள். (1) ஹோஷங்கபாத்—ஜி.ஐ.பி. ரெயில் ஸ்டேஷன்; சிவாலயம்; ஸ்வாமி மகாதேவர். (2) ஹரி**புரம்** சிவாலயம், ஸ்வாமி குப்தேஷ்வர் மஹாதேவ். இது மண் மூடப்பட்டிருந்தது; சுமார் 60 வருடங்களுக்கு முன் தோண்டி யெடுக்கப்பட்டது. சிவராத்ரி விசேஷம் (3) **ஹண்டியா** கிராமம். சிவாலயம். ஸ்வாமி சித்தநாதர். ஔரங்கஜீப் இதை யழிக்க முயன்றபொழுது கிழக்கு முகமாயிருந்த ஆலயம் மேற்கு முகமாகத் திரும்பிய தென்பர். (4) **மஹாதேவ்** குன்றம்—இதில் ஒரு குன்று 4384 அடி உயரம்; இதனடியில் குகைக் கோயில் சிவாலயம். இங்கு ஸ்வாமி தரிசினம் செய்யப் போகிறவர்கள் கையிலிருக்கும் எல்லாப் பொருள்களையும் ஸ்வாமிக்குக் கொடுத்துவிட வேண்டுமாம். (5) **பான்ச்மர்ஹிமலை**-மத்யகுன்றில் சிவாலயம். (6) பாம்லி கிராமம்; பழைய சிவாலயம். கார்த்திகையும் சங்கிராந்தியும் விசேஷம். இதற்கு நர்மதபுரம் என்பது பழைய பெயர்.

ஹௌரா பிரிவு—வங்காள ராஜதானி. இங்குள்ள சிவாலயங்கள். (1) போட்பாகன் கிராமம். சிறு சிவாலயம் (இங்கு திபத் தேசத்து புத்த ஆலயம் ஒன்றுண்டு). (2) பிர்பூம் பிரிவு. பக்ரேஸ்வர் கோயில்—இங்கு அஷ்டவக்ரன் சிலை உள்ளது. இங்கு பலதீர்த்தங்கள் உள. அவற்றுள் அக்னிகுண்டம், கந்தகஜலம் உடையது, உஷ்ணமான ஜலம்; பிரஹ்லாதர் பூஜித்த பிரம்ம குண்டம், சேத்கங்கா, கூபன் குண்டம், பைரவ குண்டம் முதலியன (3) பீம்கர்கிராமம்—இங்கு பாண்டவர்கள் 5 லிங்கங்களை பிரதிஷ்டைசெய்ததாக ஐதிகம். (4) தூப்ராஜபூர் கிராமம். இங்கு பல சிவாலயங்கள் உண்டு. அவற்றுள் முக்கியமானவை, அகாலைதாசி கோயில், மஹாரேஷ்யர் கோயில்.

முற்றிற்று.